# பருவகால நடத்தைகள்

உளவியல் வெளியீடு 8

அ. றொபேட்

மாதகல்

விலை 13 / 50

158.3
ROB

Association For Health and Counselling
JAFFNA

Sivalingam

253

# பருவ கால நடத்தைகள்

உளவியல் வெளியீடு 8

Acc No. 244

அ. ஜெபேட்
மாதகல்

முதற் பதிப்பு:- ஆவணி 1989
விலை:- 13-50
அச்சகம்:- 'சென் தோமஸ் அச்சகம்'
சென் தோமஸ் வீதி,
மாதகல்
யாழ்ப்பாணம்

(பதிப்பு உரிமை ஆசிரியருக்கு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
28. 6. 1989

# ஆசியுரை

கொழும்புத்துறை கத்தோலிக்க குருத்துவக் கல்லூரி மெய்யியற்றுறை மாணவனாகிய அருட் செல்வன் அ. றொபேட் மனித நடத்தைகள் பற்றி ஒரு ஆய்வினை இரண்டு வருடங்களாக மேற்கொண்டார். இந்த ஆய்வின் மூலம் பெற்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ''மனித நடத்தைக் கோலங்கள்'' என்ற ஒரு நூலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இவர் படைத்தார். இவரின் இரண்டாவது படைப்பாக **"பருவ கால நடத்தைகள்"** என்ற நூல் இப்பொழுது வெளிவருகின்றது.

இந்நூல் மக்களின் பருவ கால நடத்தைகள் பற்றி உளவியல் ரீதியாக விளக்கமளிக்க முற்பட்டிருக்கின்றது. தம் நடத்தையைச் சீர்படுத்தி தாம் வளரும் சமுதாயத்தில் நல்லவர்களாக ஒழுக இந்நூல் இளைஞர்களுக்கும், இளம் யுவதிகளுக்கும் உதவியாக அமையும்.

செல்வன் அ, றொபேட் அவர்களின் இம்முயற்சி மிக மெச்சத் தக்கது. அவரது முயற்சி மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்று வாழ்த்தி, இந்நூலுக்கு 'ஆசியுரை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்,

பேராசிரியர் அ. துரைராஜா
உபவேந்தர்

புனித தோமையார் வீதி
மாதகல்
28. 8. 1989

# என்னுரை

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டில், பயிலும் தாய் மொழியின் வழியாகவே அந்நாட்டுப் பன்மக வாழ்க்கையும் நாக ரீகமும் பண்பாடும் துலங்கி வருகின்றன. இதன் பிரகாரம் எனது இறுதியாண்டு மெய்யியற் துறையில் சமர்ப்பித்த ஆய்வுரைக் கட்டு ரையில் சில பகுதிகளை தாய்மொழி அடிப்படையிலேயே ஒரு நாட்டு வாழ்க்கை நிலைகள் அமைந்து உருவாகின்றது எனும் பேருண்மையை மனத்துட் கொண்டே அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழியில் **"பருவ கால நடத்தைகள்"** எழுதப்பட்டது. பல்கலைக் கழக மாணவர்களும், உயர் வகுப்பு மாணவர்களும், இளைஞர் களும், இளம் பெண்களும் ஏன் ஒவ்வொரு மனிதனும், தான் வளரும் சமூகத்தில் தமக்கும் சமூகத்துக்கும் ஏற்றவர்களாக ஒழுக இச்சிறுநூல் உதவியாக நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இச்சிறு நூலை உருவாக்க உதவியோர் எல்லோருக் கும் நன்றி உரித்தாகுக. ஆசியுரை வழங்கிய யாழ்ப்பாணப்பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. குருத்துவக் கல்லூரியில் எனது இறுதி யாண்டு மெய்யியற் துறையில் சமர்ப்பித்த ஆய்வுரைக் கட்டுரை யில் சில பகுதிகளை அச்சேற்ற அனுமதியளித்த குருத்துவக் கல்லூரி யின் உளவியல் விரிவுரையாளரான அருட் திரு எஸ். டேமியன் ஓ. எம். ஐ அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக,

நான் சந்தித்த, என்னைச் சந்தித்த பலவித உள்ளங் கள், அவ்வுள்ளங்களின் உணர்ச்சி வேறுபாடுகள் அவ்வுணர்ச்சி வேறுபாடுகளிலிருந்துஎழுந்த கருத்துக்கள், எழுத்துக்கள், பேச்சு கள் எல்லாம் விந்தையான உலகமாகும்.

நமக்குத் தெரியாத கருத்துக்களையா இவன் கூறிவிடுவான் என எண்ணும் அதிகம் படித்த உள்ளம்;

புத்தகங்களையும் படியாமல் கருத்துக்களையும் கேட்காமல் முன் முடிவு செய்து கொள்ளும் ஒரு தலையுள்ளம்;

இவன் என்ன கூறினாலும் அதை மறுத்துத்தான் ஆக வேண்டும் என எதிர்த்து நிற்கும் எதிர்ப்புள்ளம்;

இவைகளுள்ளும், கருத்து நேர்மையுள்ளதாயின் யாராலும் அழிக்க இயலாது. நேர்மையற்றதாயின் யாராலும் நிலைநிறுத்தவும் இயலாது. கருத்தின் உயிர்த்திறனாகிய உண்மையைத் தேர்ந்தறியக் காத்திருக்கிறது காலவெள்ளம். கருத்து உயிரோட்டமுடையதாயின் இன்று அது சிறிதாயினும் வெள்ளத்தில் எதிர்நீச்சல் போட்டுக் காலவெள்ளத்தினாலே வளர்க்கப்பட்டுப் பல்கிப் பெருகி நிலை நிற்கும், உயிரற்றதாயின் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு மண்ணினுள் புதைக்கப்பட்டு மட்கி மறைந்துவிடும். கருத்துக்களை காலவெள்ளத்துக்கே ஒப்படைக்கிறேன்.

என் வாசகர்களால் எனக்கு எடுத்துக் காட்டப்படும் குறைபாடுகளும் கண்டனங்களும், பாராட்டுக்களும் கூட எனது முயற்சிக்கு ஊக்கத்தினையும், சிந்தனைக்குத் தெளிவினையும் போக்கில் நிதானத்தையும் அளிப்பதாக அமையுமென நம்புகின்றேன்.

உளவியல் விஞ்ஞானம் வளரவேண்டும். மெஞ்ஞானம் மலர வேண்டும். ஞானத்தின் ஊற்றான இறைவனடி கொண்டு போய் இவை சேர்க்கவேண்டும். தங்களது இயற்கையான உடலியல், உளவியல்பு சார்ந்ததுமான உண்மையையும் அவற்றை மலர்ச்சியுறும் நேர்க்கருத்துப் படியான ,வழிகளில் செயல் வடிவமாக்கி என் வாசகர்கள் நலமடைய வேண்டுமென நான் ஆசிக்கிறேன். அனைத்திற்கும் மேலாக இறைவனுக்கே இந்நூல் நன்றியோடு சமர்ப்பணம்.

அ. ஜெபேட்

# பொருளடக்கம்


1. முகவுரை 7

2. இளமைப் பருவம் 9

3. குடும்பத்தின் பங்கு 12

4. ஆளுமை 16

5. உள உணர்ச்சியும் உளக்கிளர்ச்சியும் 20

6. சமூக நடத்தை 23

7. பால் வேறுபாடு சார்ந்தஊக்குவித்தலும் நடத்தையும் 26

8. முடிவுரை 30

9. பின்னிணைப்பு 40

10. கலைச் சொற்கள் 45

11. துணை நூல்கள் 46

# முகவுரை

1

உளவியலானது விஞ்ஞானத் துறையைச் சார்ந்ததாகும். இது விசேஷமாக மனித நடத்தையை விளக்குவதோடு நடத்தையின் பல வேறுபட்ட தன்மையை விபரித்துக் கூற முயலுகின்றது. ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் உளவியல் தொடர்பான அறிவாற்றலைப் பயன்படுத்துகிறார்கள்.

உளவியலுக்குப் பலர் பலவாறாக வரைவிலக்கணம் கூறியுள்ளனர். ஆயினும் எச். சி. வரன் என்பவர் தமது உளவியல் அகராதி என்னும் நூலில் உளநிகழ்ச்சிகளை அல்லது உளச் செயல்களை ஆராயும் விஞ்ஞானம், மனிதனுக்கும் சூல்நிலைக்கும் இடையில் ஏற்படும் பரஸ்பரத் தொடர்புகளை ஆராயும் விஞ்ஞானம், மனிதனுடைய நடத்தையை முறையாக ஆராயும் விஞ்ஞானம், தனி மனிதனுடைய மனம் பற்றிய விஞ்ஞானம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளதே உளவியல் என்றார்.

உளவியலின் குறிக்கோளாக மனச் செயற்பாங்கின் நடத்தையை அவதானித்து வரையறை செய்வது. பெறப்பட்ட தகவல்களின் கருத்தை தெளிவு படுத்தல், அச்சூழ்நிலையால் என்ன நடைபெறும் என்பதை முன் மதிப்பிட்டுரைத்தல், இறுதியாகப் பெற்ற அறிவை மனிதனின் உடல், உள வாழ்க்கை நலநிறைவு நிலையை மேம்படுத்தல் என்னும் கணியங்களை உள்ளடக்கியுள்ளது என உளவியலாளர்கள் நெறிப்படுத்தியுள்ளார்கள்.

எனது கட்டுரையில் நடத்தையியல் அணுகுமுறையை அடிப்படையாக வைத்தே செயற்பட்டிருக்கிறேன். இம்முறையானது 1900 ஆம் ஆண்டளவில் அமெரிக்க உளவியலாளர் யோண் வைற்சன் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. பருவகால நடத்தையை புரிந்து கொள்ளும் ஆற்றல் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மனித நடத்தை வாத அறிவானது ஆண், பெண் இருபாலாரும் தத்தமது நடத்தையை புரிந்து கொள்ளும் ஆற்ற

லுக்கு உதவியாகும். மேலும் ஆண், பெண் இருபாலாரும் தத்தமது நடத்தையைமிகச் சீராக அமைக்க ஆர்வமிக்கவராயும் தங்களது பிள்ளைகளை நல்வாழ்விற்குத் துணை புரியும் வழியில் வளர்க்க ஆவலுடையதாகவும் உருவாக்க இவ்வறிவானது கட்டாயமாக வேண்டியதாகும். இளமைப் பருவம் உணர்வுகள் ததும்பும் பருவம், உணர்வலைகளில் சிக்கித் தவிக்கும் பருவமாகும். இப்பருவத்தில் ஆணும் பெண்ணும் உணர்வுகளிலும் அதன் வழி உரிமைகள் பெறுவதிலும் வேறுபடுகின்றார்கள். மேலும் இளமைப் பருவத்தில் எழுகின்ற உணர்வுகள் உரிமை பெறுகின்ற வாய்ப்பானது அவன் வாழுகின்ற சூழல் சம்பவ நிகழ்வுகளில் தங்கியுள்ளது. இப்பருவத்தில் உடல்சார்ந்த மாற்றங்கள், உளம்சார்ந்த மாற்றங்கள் உணர்ச்சி சார்ந்த மாற்றங்கள், சமூகம் சார்ந்த மாற்றங்கள், என்பன நடைபெறுகின்றன.

சொல்சார்ந்த தொடர்புக்கும், சொல்சாராத தொடர்புக்கும் இடைப்பட்ட வெளிப்படுத்தலே மனித நடத்தையை புரிந்து கொள்ளும் ஆற்றலாகும். நடத்தையானது மனித இன ஆராய்ச்சிக்குரிய, சமூகவியல் ஆராய்ச்சிக்குரிய, உடலியல் ஆராய்ச்சிக்குரிய, உளவியல் ஆராய்ச்சிக்குரிய பின்னிப் பிணைந்த ஆக்கக் கூறுகளில் வரையறை செய்யப்படும். மனித நடத்தையானது சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதன் வெளிப்பாடு ஏற்றுக் கொள்ளப்படும். மக்களின் செயற்பாடுகள் வெளிநிலைச் சூழலால் நெறிப்படுத்தப்படும் வேளையிலும் அவர்களின் நடத்தையானது தத்தமது நடத்தையில் தங்கியுள்ளது. மனிதனின் செயற்பாட்டு முன்னேற்றத்தில் மரபு நிலையும் சூழ்நிலையும் பின்னிப்பிணைந்துள்ளது.

---

நாம் கவனிக்க வேண்டியவை
பேச்சு, நடத்தை, செயல்

---

# இளமைப் பருவம் 2

## இளம்பருவத்தில் ஏற்படும் உடல்மாறுதல்களை அனுசரித்தல்

இளம் பருவமானது குழந்தைப் பருவத்துக்கும் முதிர்ச்சிப் பருவத்திற்குமிடையில் செயற்படுகிறது. குருதியில் கலந்து உறுப்புக்கள் செயற்படத்தூண்டும் உட்சுரப்பு நீர் வகைகளானது ஆண் விந்துகளும், புதிய உயிராக உருவாகும் பெண் கரு உயிரணுக்களும் முதிர்ச்சியுற்று வளர்ச்சியடையும். பால்சுரப்பிகளை உற்பத்தியாக்கத் தூண்டவும் பயன்படுகிறது. முதலாம் நிலை பால் இன அறிகுறிகளும் இரண்டாம் நிலை பால் இன அறிகுறிகளும் எல்லா மாற்றங்களிலும் உட்பட்டிருக்கிறது. முதலாம் நிலை பால் இன அறிகுறிகளின் வெளிப்படுத்துதல் இனப்பெருக்க பால் உறுப்புக்களில் முழுவளர்ச்சியை குறிக்கிறது. பெண்களில் சூல் சுரப்பிகள், கருப்பை, பிறப்புப்பாதை என்பவற்றில் விரைந்த வளர்ச்சியையும், ஆண்களில் விதைப்பைஉறை, விந்தணு, ஆண் குறி என்பவற்றின் வளர்ச்சியையும் குறிக்கும்.

13, 14 வயதில் ஆண்கள் பால்தன்மையில் முதிர்ச்சி அடைவார்கள். பெண்களின் மாதவிடாய் பருவம் குளிர் நாடுகளில் பிந்தியும், வெப்ப நாடுகளில் முந்தியும் 8-18 வயதிற்குமிடையில் ஆரம்பமாகும். இளம் பருவத்தில் முதலாம் நிலை பால் இன அறிகுறியின் வளர்ச்சியை உணர்கின்ற போதிலும் இரண்டாம் நிலை பால்இன அறிகுறியின் வெளித்தோற்றம் பெரும்பாலும் நேரச்கூடியதாகும்.

**இரண்டாம் நிலை பால்அறிகுறிகள் பெண்களில்:-** மார்பக வளர்ச்சி, இடுப்பு விசாலமாதல், பருவ உரோமம் வளர்தல், **ஆண்களில்:-** தாடிவளர்தல், நெஞ்சில் உரோமம் வளர்தல், பருவ உரோமம் வளர்தல்,குரல் அழுத்தமாதல் ஆகும்.

பிறக்கும் குழந்தையில் கிட்டத்தட்ட 3 இலட்சம் முட்டைகள் உள்ளன. அவற்றில் சொற்பமே பூப்புநிலைவரைஅடைகிறது. பெண்ணின் கருப்பையில் கருமுட்டையும் ஹர்மோன்களும் உற்பத்தி

யாகின்றன. மாதவிலக்கிலிருந்து சாதாரணமாக 18 – 22நாட்களில் வெளிவரும் கருமுட்டை 48 மணித்தியாலங்கள், உயிருடனிருக்கும். பருவநிலை அடைந்த பெண்களின் மார்பகங்கள் நன்கு புலப்படும் மார்பகங்களின் வளர்ச்சியும், கருவகங்களின் முதிர்ச்சியும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. முட்டையானது சினையாகாவிட்டால் மாதவிடாய் தோன்றுகிறது. இது சராசரி 45 வயது வரை நடைபெறுகிறது. மாதவிடாய் நாட்களுக்குச் சிறிது முன்பு மார்பகங்கள் விம்மிப் புடைகின்றன. முலைக்காம்புகள் விறைத்து உறுதியாகிறது. மாதவிடாய் காலத்தில் பெண்கள் கிட்டத்தட்ட எப்பொழுதும் முகத்தில் சிறு வீக்கத்தையும், சில சமயங்களில் உடம்பில் தடிப்பையும் அடைகிறார்கள். மாதவிடாயானது உடல் அமைப்பின் எல்லா உயிர்த்தன்மை தோற்ற வெளிப்பாடுகளையும் பாதிக்கின்றது.

ஆணில் உணர்ச்சி ஏற்படும் போது பிறப்புறுப்பில் உருவாகும் திரவமும், உயிர் அணுக்கருவும் சேர்ந்து விந்தை உருவாக்கிறது. அதில் 20 அல்லது 40 கோடி உயிர் அணுக்கள் உள்ளன. இவை அநேகமாக 72 மணித்தியாலம் உயிராக இருக்கும். பிறப்புறுப்பில் விந்தும் ஹர்மோன்களும் எவ்வேளையும் உருவாகும். நித்திரை செய்யும் தருணம் விந்துநீர் வெளிப்படுதல் ஒருவரது விந்துநீர்ச் சுரப்பிகளின் ஒழுங்கான இயக்கத்தைக் காட்டுகின்ற ஒரு நல்ல அடையாளமே தவிர வேறு அல்ல. இளைஞர்கள் உண்மையில் அதைப்பற்றி மகிழ்ச்சி அடைய வேண்டுமே தவிர, கவலையோ, பயமோ கொள்வதற்கு இடமில்லை. ஆனால் இயற்கைக்கு மாறாக விந்துநீர் வெளிப்படுத்தல் உடம்பை உண்மையிலே பலவீனப்படுத்திவிடும், மேலும் ஆண்கள் பால் முதிர்ச்சியடையும் காலப்பகுதியில் சிலரின் உடல் வளர்ச்சியின் தன்மையினால் மார்பகங்களின் முலைக்காம்புகள் விம்மிப்புடைவது கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் செயற்படுவதினால் அவர்கள் உளத்தாக்கத்துக்கு உட்படுகிறார்கள். ஒருவர் தனது முதுமைப் பருவ காலம்வரையும் அதாவது தனது வாழ்க்கையில் உடலை ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுத்திக் கொண்டால் அவரின் பால்முதிர்ச்சி செயல் ஆற்றல் தொடர்ச்சியாக இருக்கும் என்பது மருத்துவளாளரின் கருத்தாகும்.

உடல் வளர்ச்சியில் முக்கியமானது பால்முதிர்ச்சியா கும். இம்முதிர்ச்சி வந்தெய்துவதில் மக்களின் தனிவேற்றுமைக ளும், மற்ற உடல் வளர்ச்சி வேறுபாடுகளும், சமூகநடத்தையும் மனச் செயலும் காரணிகளாகின்றன. இளம் பருவத்தில் ஏற்படும் மாறுதல்களே வியக்கத்தக்கவை எனலாம். மேலும் ஆணின் முதிர்ச்சியிலும், பெண்ணின் முதிர்ச்சி முந்துவதால் பலசிக்கல்கள் இருபாலாரின் நடத்தையிலும் ஏற்பட வாய்ப்புண்டாகிறது.

## ஒரே வயதொத்தவர்களின் நிலைப்பாடு

ஒரே வயதொத்தவர்களின் உறவானது எவ்வாறு மற்ற வர்களுடன் தொடர்பு கொள்வதென்றும், சமூகக் கூட்டான நடத் தையில் செயற்படவும், செயற்திறனை பொருத்தமான வீதத்தில் செயற்படுத்தவும் உதவியாக இருக்கும். ஒரே வயதான குழுவினர் சமுதாயக் கூட்டான செயலில் முக்கிய பங்குடையவர்கள். உதாரண மாக இயக்கங்களின் குழுக்களில் தலைமைத்துவம், துணைசெய்யும் வகைகள், மற்றவர்களை வழிநடத்தல் போன்றவற்றின் செயற் பாடுகளாகும். பெற்றோர்களுடன் உறவாயிருப்பதோடு ஒரே வய தானவர்களுடன் உறவாயிருப்பதும் சமுதாயக் கூட்டான வளர்ச் யின் நிலைப்பாடாகும்.

இரண்டு வயதான பருவகாலத்தில் ஒரேவயதானவர் மற்றொன்றைச் சார்ந்திருக்கும் சமுதாய துலங்களில் கூடுதலாக செயற்படுவார்கள். ஒரேவயதான இளம் பருவத்தினர் புதுப்பாணி யான முறையிலும், இன்னிசையிலும், பொழுது போக்கிலும், நண்பர்களை தெரிவு செய்வதிலும் முன்னுரிமை கொடுப்பார்கள். ஒரேவயதொத்தவர்களின் உறவின் செயற்பாடானது அவர்களின் நடத்தையில் நிலைப்பாடு கொண்டுள்ளது. இருபாலாருக்கிடையி லுள்ள நண்பர்களின் செயற்பாடானது இளம் பருவகாலத்தில் விசேட பற்றுத் தொடர்பாக இருக்கும்.

# குடும்பத்தின் பங்கு 3

ஒரு குழந்தை பரந்த உணர்வுகளால் செல்வாக்குப் பெறுகிறது. இவ் உணர்வுகள் பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள், ஆசிரியர்கள், பொது சாதனங்கள் ஆகியவற்றின் தூண்டுதலால் ஏற்படலாம். குழந்தை பருவத்தில் பெற்றோர்-பிள்ளை, பாசம்-உறவு என்ற தொடர்ச்சி இருக்கச் செய்யும். இக்காலஎல்லையில், பெற்றோர் பிள்ளைகளுக்காக மாதிரிப் பொருள்களாகின்றனர். போதனை, தண்டனை, வெகுமதி என்ற பல தீரப்பட்ட தீர்மானங்களை எடுக்கின்றனர். தண்டனையானது நடத்தையில் மாற்றத்தை விளைவிக்கிறது. அடக்கியாளுகின்ற அல்லது பிரதிகூலமான அன்புள்ள அல்லது தோல்வி மனப்பான்மையுள்ள பெற்றோர்களிடம் வாழத்தான் செய்கின்றனர். இந்த ஒவ்வொரு ரக பெற்றோரும் பிள்ளையில் வித்தியாசமான ஆளுமையை உண்டாக்க ஏதுவாகின்றனர் என மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தவித பகுப்பு பெறுபேற்றால் பிள்ளைகள் நட்புரிமையுள்ள, ஆதிக்கமுள்ள, உயர்ந்த கண்ணியமிக்கவர்களாகின்றனர். கோபம்குன்றிய, ஆக்கத்திற்குன்றிய, மிகவும் நம்பிக்கையுள்ள, அதிக எதிர்பைக் காட்டும் குழந்தையை உருவாக்கும் அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டுவர். சண்டையிடுகின்ற, தன்நடத்தையில் குறைந்த கட்டுப்பாடுகளைக் கொண்ட, குற்றங்களை ஆழமாக உணரும் குழந்தையே வெட்கத்தால் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழத் தள்ளப்படுகிறது.( து. நூ 1, ப. 1144)

புதிதாகப் பிறந்த ஆண்குழந்தை ஒரு குடும்பத்தின்முடிக்குரிய அரசகுமாரனாக சுயமாகவே அடிகோலப்படுகின்றான். முதற் பிறந்த குழந்தை, வளர்ந்தோர்களுடன் தன்னை இனம் காட்டிக் கொள்வதோடு, வீட்டிற்கு வெளியே நண்பர்களை அதிகம் நம்புவர். தனது பெற்றோரால் அதிகமாக இயக்கப்படுகிற மூத்தபிள்ளை தமது வயதினரோடு செல்வாக்கைப் பெறுவதோடு, அடக்கப்பட்ட குழந்தைகள் தமக்கென பெருமை தேடுவர்.(து.நூ 2, ப. 85)

இன்றைய கால கட்டத்தில் குடும்ப வாழ்க்கை மிகவும் கஸ்டமானது. ஒரு குடும்பத்திலிருந்து நாம் அதிகம் எதிர்பார்க்கின்றோம். அன்பையும் பாலுறவையும் பற்றி ஆராய்வது மிகவும் கஸ்டமானது, அன்பு என்பது ஒருவரிடம் ஆழமான சிந்தனையை வைத்ததாகும், சிறந்த பெண்மை என்பது அற்பமான உடற்பொருத்தமல்ல அது அன்பின் முதிர்ந்த உறுதியாகும். எதிர்ப்பால் தன்மையால் ஆண் ஒருவரைக் கவரலாம். ஆனால் ஆண்கள் தங்களிலும் பார்க்க குறைந்த கல்வியறிவுள்ள பெண்களையே விவாகம் செய்ப விரும்புவர். பெண்கள் தங்களிலும் பார்க்க எல்லா வழிகளிலும் ஆண்கள் மேலானவர்களாக இருப்பதையே விரும்புவது தெளிவு.

ஆன்மீகத்தையும் உணர்ச்சி வசப்பட்டதையும் புதுமையாக்குவதே அன்பு-உறவு. மனம்,உடல்,உயிர் ஆகியன ஒன்று சேர்வதே அன்பு. ஆண் பின்வரும் மிகச் சிறந்த கொள்கைகளை உடையவனாக விளங்க குடும்பத்தில் எதிர்பார்க்கப்படுகின்றான். மனைவியை பாதுகாக்கின்றான். அவளின் உணர்ச்சியில் துணையாகின்றான். அவளின் நலனுக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் தேவையானவற்றை நல்கிறன். பிள்ளைகள் பெறுவதில் திருப்தியளிக்கிறான். தான் ஓய்வாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ ஒரு வீடு அமைத்துக் கொள்கிறான், உடல் விருப்பின் படி மகிழ்ச்சியும் பற்றும் எய்கிறான். பிறர் தன்னில் கவனம் செலுத்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றான், தன்னுறுதியும் தான் அல்லது ஏனையோர் முதிர்ச்சியடைந்தமையை எடுத்துக் காட்டும் சூழலை உண்டாக்குகின்றான்.

கணவனும் மனைவியும் சில தேவைகளிலும் பங்கேற்கின்றனர். ஒவ்வொருவரின் கருமங்களை முடிக்கும் மதிப்புக்களையும் தேவைகளையும் கருத்திற் கொள்கின்றனர். எதிர் பால் கவர்ச்சிக்கு சான்றுகள் இல்லை. திருமணத்தால் ஒவ்வொருவருடைய தேவையைக் கணிப்பதற்கு அவர்கள் உந்தப்படுகின்றனர். ஒருவரோடு ஒருவர் தொடர்பு வைத்துக் கொள்ள கற்கின்றனர், தனித் தன்மைக்கு அனுமதிக்கப்படுகின்றனர், விட்டுக் கொடுப்பதைக் கற்கின்றனர். ஒருவருக்கொருவர் நன்றியுடையோராயிருந்து, ஒருவர் மற்றவரிடமிருந்து அதிகமான தேவைகளை எதிர்பார்க்கக் கூடாது என உணர்கின்றனர்.

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு ஆண்மையும், மனைவிக்கு பெண்மையும் எந்த அளவுக்கு உயர்வான நிலையில் அமைந்திருக்கிறதோ அதுதான் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சிக்கும் இன்பத்திற்கும் அடித்தளமாக அமையும். மற்ற வசதிகள் வாய்ப்புக்கள் பலவீனமான நிலையில் அமைந்திருப்பினும் அக் குடும்பத்தில் இன்பமும், மகிழ்ச்சியும் தாண்டவமாடும் என்று கூறிவிட முடியும். குடும்ப வாழ்க்கையில் பெண்மையின் இயக்கத்திற்கு ஆண்மையின் செயற்பாடுதான் ஆதாரமாக இருக்கின்றது. மேலும் உடலுறவு நிகழ்ச்சியில் இயக்கும் சக்தியாக ஆணின் ஆண்மை, இயங்கு சக்தியாக பெண்ணின் பெண்மையும் விளங்குகின்றது. இயக்கு சக்தி பலவீனமாகிவிட்டால், இயங்கும் சக்தியானது பரிதாபகரமான நிலைக்கு உள்ளாக நேரிடுகின்றது. இப்படிப்பட்ட அந்தக் குடும்பத்தின் அமைதி சலனமுற ஆரம்பித்துவிடும். பெண்மை என்பது ஒரு வீணை என்றால் ஆண்மை என்பது அந்த வீணையினை மீட்டி அற்புதமான இசையினை எழுப்பும் விரல்களாகும். ஒரு வீணையில் இனிமையான இசை எழுவதற்கு ஏதாவது தடங்கல் இருக்கிறதென்றால் வீணை பழுதுபட்டிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம், வீணையை மீட்டும் விரல்கள் அல்லது விரல்களுக்கு உரிய சக்தியற்ற நிலையடைந்து இருக்கலாம், இரண்டும் பழுதுபட்டிருக்கலாம். சமுதாயக் கூட்டான கற்றலின் முழு உளப்பதிவின் படி குழந்தைகள் தங்களின் பெற்றோர்களின் நடத்தையைப் பார்த்தும் பழகுகின்றார்கள். இதன் மூலம் அவர்கள் தமது பாலியல் தொடர்பினை வளர்த்துக் கொள்கிறார்கள் எனவே பெற்றோர்கள் உடலுறவு கொள்ளும் வேளையில் பிள்ளைகளைத் தவிர்ப்பது சாலச் சிறந்ததாகும்.

ஆண் தன்மையின் இயலாத்தன்மையின் தரத்திற்கும், சமூகத்தின் ஆதிக்கத்திற்கும் வாழ முடியாததால், அநேக திருமணங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன, இருந்தும் இவைகள் தற்பொழுதுள்ள சூழ் நிலையில் சில பெண்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஓர் இளம் மனைவி தனது கணவனுடன் சமுதாயத்தில் நடமாட எண்ணி பார்க்கிறாள்.

பெண்மையின் முக்கிய கடமைகளை பெண்கள் அறிந்து கொள்ள பெற்றோர் உதவலாம் அதேபோன்று இயற்கை நிகழ்வுகளை இளைஞன் தெரிந்து கொள்ளவும் உதவ வேண்டும். ஆணோ, பெண்ணோ எதிர்பாலாருடன் ஒன்றுதலில் பரந்த அக்கறை கொள்வதால் ஒன்றாக விளையாடுகின்றார்கள், உரையாடுகின்றார்கள் ஒருவர் செயலில் மற்றவர் கவனம் செலுத்துகின்றார்கள். இவ்வித மாக ஒரு பையன், தன் சகோதரியோடு விளையாட்டுகளில் குறைந்த ஆசையைக் காட்டுகிறான் ஆனால் போட்டி விளையாட்டுக்களில் அதிக ஆவலைக் காட்டுகிறான். ஒரு பெண் தன் சகோதரனுடன் பால்கலப்புள்ள செயல்களில் அதிக ஆர்வமும் அதிக எதிர்ப்புக் களையும் காட்டுகிறாள். உளவியல் ரீதியான பாலுணர்வின் செல் வாக்கு 3 முதல் 9 வயதுக்கிடைப்பட்ட குழந்தைகளால் மிகவும் கூர்மையாக உணரப்படுகிறது. (து. நூ 2, ப 87)

மனிதனின் இளமைப் பருவத்தில் எழுகின்ற உணர் வுகள் உரிமை பெறுகின்ற வாய்ப்பானது அவன் வாழ்கின்ற சூழலில் தங்கியுள்ளது. திருமணத்தில் இணைப்பு பாலமாக அமைவது உணர் வாகும். இவ்வுணர்வுநிலையில் ஒருவரையொருவர் புரிந்துணர்வு கொள்ளாவிட்டால், சட்டம் தந்த உரிமையோ, அதனால் வந்த உறவோ செயலற்று விடுகிறது. காலங்களின் மாறுதலுக்கேற்ப மனிதன் தன்னை மாற்றிக் கொள்ளும் பண்புள்ளவன். மங்கைக்கு ஏற்ற மணாளனாக மனிதன் மாறவேண்டுமே தவிர மணாளனுக்கு ஏற்ற மங்கையாக பருவமங்கை முழுவதும் மாறமுடியாது. காலத் தோடு இயற்கையோடு ஒப்புரவாகி ஞானத்தில் வாழ்வது சாலச் சிறந்ததாகும்,

---

**நிபந்தனைகளுக்கு உட்பட்ட அன்பு அன்பன்று,**
**அது தாய்ப்பாலுக்கு விலை பேசுவது போன்றது**

---

# மனித ஆளுமை 4

ஆளுமை என்பதற்குத் திருத்தமான வரைவிலக்கணம் கூறுவது சிரமமானதாகும். ஏனென்றால் ஆளுமை என்பது உளவியலிலே பரந்த பொருளுடைய சொல். ஆளுமை என்பது ஒருவனுடைய உடற் பண்புகள், உளப்பண்புகள், மனப் போக்குகள், சமூக அறநெறிப் பண்புகள் போன்ற எல்லாப் பண்புகளின் பிணைப்பைக் குறிக்கிறது. ஆளுமை ஒரு மனிதனைப் பற்றிய முழு விளக்கமாகும். உடற்தோற்றம், உள்ளம், உணர்திறன், இயல்பூக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டமைந்த சக்தித் தொகுப்பே ஆளுமையாகும்.

ஆளுமையானது மரபுநிலை, சூழ்நிலை என்னும் இரு காரணிகளில் தங்கியுள்ளன. இவ்விரு காரணிகளால் உருவாகும் ஆளுமை ஒருவருக்கொருவர் மாறுபடுவது இயற்கை. ஆளுமை வளர்ச்சியில் மரபுநிலைக்கு முக்கிய பங்கு உண்டு. ஒருவனது உடலமைப்பு அவன் மரபுநிலையைப் பொறுத்ததாகும். கிட்டத்தட்ட ஆறு பரம்பரைக்கு அதன் செயற்பாடு இருக்கலாம். அவனது உயரம் பருமன், தோற்றம், உடற்பண்புகளும் அவனுடைய ஆளுமை வளர்ச்சியை பாதிக்கின்றன. உடலமைப்பில் ஏதாகிலும் குறைபாடுகள் அவன் நடத்தையில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

மரபுநிலைக் காரணிகளைப் போலவே சூழ்நிலையும் பெரும் பங்கை வகிக்கிறது. ஒரு சமூகம் ஏற்றுக் கொண்ட கொள்கைகள், கலாச்சாரம், பண்பாடு என்பன அச் சமூகத்தில் வாழும் ஒருவரது ஆளுமை வளர்ச்சியில் பெரும்பங்கினைச் செலுத்துகின்றன.

பொதுவாகக் கூறுமிடத்து, ஆளுமை வளர்ச்சி என்பது ஒருவன் தனக்கே உரித்தான நடத்தைக் கோலங்களைப் பெறும் ஒரு தொடர்ச்சியான செயல் முறையாகும். உடல்தோற்றம்

உளவளர்ச்சி, உணர்வுத்திறன் ஆகியவை ஒருங்கே அமையப் பெற்ற ஆளுமையில் முழுமை அடைவதே முதிர்ச்சி அடைவதாகும் ஒவ்வொரு வயதிற்கும் பருவத்திற்கும் ஏற்ற ஆளுமையில் முதிர்ச்சி அடையவேண்டியது இன்றியமையாததாகும்.

## உள ஆற்றல் சார்ந்த உளக்காட்சி

20 ஆம் நூற்றுண்டளவில், உளவியலிலே ஒரு புரட்சி ஏற்படுத்தியவர் சிக்மண்ட் புறெய்ட் என்று கூறலாம். அவரின் கோட்பாடு இயற்கை, வாழ்வு, மனம் என்ற மூன்றுக்கும் விரிவான விளக்கம் கொடுக்கிறது. இவரின் விளக்கத்தின் மையமாக விளங்குவது' நனவிலி உள்ளம்' அல்லது' அடிமனம்' என்று கூறலாம். மனம் என்பதை நனவு உள்ளம், நனவு அடி உள்ளம், நனவிலி உள்ளம் என மூன்ருகப் பிரிக்கிருர்.

**நனவு உள்ளம்** -- உடன் எண்ணங்கள், சிந்தனைகள் கொண்டிருக்கும் பகுதி.

**நனவு அடி உள்ளம்**— உடன் ஞாபகத்திலிருந்து மறைந்திருக்கும் விடயங்களை உள்ளடக்கும், இங்கிருந்து மறந்திருப்பவைகளை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

**நனவிலி உள்ளம்** —இப்பகுதியில் ஒருவனது எண்ணங்களும் விருப்பங்களும் அடங்குகின்றன. விருப்பங்கள் அதிகமாக உறைந்து கிடக்கின்றன. உளவாற்றலால் இவ்விருப்பங்களை 1 ஆம் பகுதிக்கு கொண்டு வரலாம்.

மனிதனின் ஆளுமையானது மூன்று கட்டங்களிலே உருவாக்கப்படுகிறதென புறேய்ட் கருதினர்

**"அது"** —பூர்வீக உந்திகைகளால் ஆனது. தனிப்பட்ட ஒருவரின் உணர்வுந்தல் நனவிலி நிலையில் செயற்படும்.

**"அகம்"** — உணர்ச்சியுள்ள தூண்டுதல்களால்ஆனது. ''நான், என்னும் முனைப்பையுடையது. நனவுநிலையில் செயற்படும்

**"மீயகம்"** - கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும் கட்டமாகவும்' அவைகளை மீறுகின்றபோது தண்டனை விதிக்கக்கூடியதாகவும் உள்ளது. நனவுநிலை, நனவு அடிநிலை, நனவிலிநிலை என்பவற்றை தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

எரிக்பெர்னின் ஆய்வு முறைக் கோட்பாடு தனிமனிதனின் மனத்தில் பதிவாகும் அனுபவங்களும் உணர்ச்சிகளும் தோற்றுவிக்கின்ற மனஇயல்புகள், பெற்ருேர் தன்னிலே, முதிர்ச்சி தன்னிலே, குழந்தை தன்னிலே ஆகிய மூன்று மனநிலேகளில் வெளிப்படுகின்றன.

### பெற்ருேரின் தன்னிலே

வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கையிலிருந்து (பேச்சு, பழக்கவழக்கம், நடத்தை) பெறும் அனுபவங்கள் மனத்திரையில் பதிந்து செயல்படுகின்ற மனஇயல்பு.

### முதிர்ச்சி தன்னிலே

வாழ்க்கை உண்மைகளே நன்கு சீர் தூக்கி சுதந்திரமாக முடிவெடுக்கும் மனஇயல்பு.

### குழந்தை தன்னிலே

குழந்தைப் பருவத்தில் மனத்திரையில் ஆழமாகப்பதியும் உணர்ச்சி மிக்க அனுபவங்கள் செயல்படுகின்ற மனஇயல்பு.

ஆளுமை முதிர்ச்சி பெற்ற மனிதரிடம் சிறப்பாக உண்மையுணர்வு, அன்புறவு, அஞ்சாமை என்னும் பண்புகளேக் காணலாம். தன்மதிப்பே ஆளுமையின் அளவுகோல், மனிதன் தன்னே எவ்வாறு மதிக்கின்ருனே அதே அளவில் தான் பிறரையும் மதிக்கின்ருன். தன்மதிப்பை இழக்கும் போது உளவியல் சிக்கல்கள் உருவாகின்றன. தன்னுரிமை, தனித்தன்மை, சமூக ஒற்றுமைநிலே, சமயசார்பு இவைகள் யாவும் ஒருவனது ஆளுமைக்கு அடிப்படையாக அமைகின்றன. அநேக உளவியலாளர்கள் ஆரம்ப கால மனித வாழ்க்கையானது ஒருவரின் ஆளுமையின் உருவாக்களில் பெரும்பங்கை வகிக்கின்றது என கருதுகிருர்கள். அதாவது முதல் 5 வருடங்களில் அவர்களின் வாழ்க்கை ஆளுமை வளர்ச்சிக்கு இன்றியமையாததொன்ருகும்.

ஒருவரின் ஆளுமைச் சிதைவுகளுக்குத் தனியனுகவும் கூட்டாகவும் பலகாரணிகள் செயல்படுகின்றன. எனவே வேதனேயின் விளிம்பில் நின்று வாதனேப்படும் மனிதன், சாதனேயை

நிலைநாட்ட, ஆளுமைச் சீரிணக்கம் செய்துகொள்வது அவசியமாகின்றது.

**ஆளுமை சீரிணக்கம்** பின்வரும் மூன்று படிநிலைகளில் நிறைவேற்றப்படலாம். அவையாவன:

1) தனிமனித உள்ளத்தில் எழும்போராட்டங்களை இனம் காணுதல்
2) அப்போராட்டங்களுக்கான காரணிகளை உய்த்தறிதல்.
3) அவற்றை வெற்றிகொள்ளும் மாற்றுத் திட்டத்தை வகுத்தல்.

இம்மாற்றுத்திட்டம் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாயின் சிறப்பாக இருக்கும்.

1. ஒருவர் தன்னினுள்ள பலங்களையும் பலவீனங்களையும்ஆராய்தல்
2. தன்னிலும் ஏனையோரிலும் காணப்படும் திறமைகளுக்கும் நற்பண்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.
3. வாழ்வில் பிரச்சனைகள், தோல்விகள், ஏமாற்றங்கள் ஏற்பட்டதும் உடனே நம்பத்தகுந்த ஒருவரிடத்தில் ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்துதல்.
4. ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஆர்வத்தோடு ஈடுபடல்.
5. தனது ஆற்றல்களை நினைவு கூர்ந்து தன்னைத் பாராட்டிக் கொள்ளுதல்.
6. பிறரைப்பற்றி அநாவசியமாய் குறைகூறும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ளுதல்.
7. நேர அட்டவணைப்படி வாழ்க்கை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்
8. ஒழுங்காக ஒய்வு எடுத்தலும் மீளாய்வு செய்தலும்.
9. சிறந்த வாழ்க்கைத் தத்துவங்களை அன்றுடம் காலையிலும் மாலையிலும் நினைவு கூருதல்.

---

**தன் சிந்தனைகளின் விளைபொருளே ஒருவன். அவனது நினைவு எப்படியோ அவன் ஆவதும் அப்படியே.**

---

# உளஉணர்வு, உளக்கிளர்ச்சி 5

உணர்வு என்பது அகப்புறக் காரணிகளால் ஒருவரு டைய உள்ளத்தில் தோன்றுவதாகும். நனவு நிலையில் மனித செயற்பாடுகளைப் பாதிக்கும் பொது உளநிலையே உணர்வாகும். உணர்வு என்பது வேகம் பெறும்போது அது உள்ளக்கிளர்ச்சியா கின்றது. உளவியலாளர்கள் உள்ளக்கிளர்ச்சியை மூன்று பகுதிக ளாக பிரித்துள்ளார்கள், அவையாவன:

1. அக உணர்வு நிலைக்குரிய அனுபவங்கள்:—இன்பம், துன்பம், ஊக்கம், ஓய்வு, கிளர்ச்சி, அமைதி போன்ற அக நிலை உணர்வு உண்டாகும்.

2. உடற்செயற்பாட்டின் எடுத்துக்காட்டமைப்பு—உடல் மாற்றத் தில் உள்ளக்கிளர்ச்சி தங்கியுள்ளதை உள்ளடக்கியுள்ளது.

3. வெளிப்படையாக செய்யப்பட்ட அனுபவங்களின் எடுத்துக் காட்டமைப்பு:—உடம்பின் தோற்ற அமைப்பும், தனித்தன்மை யான உள்ளக்கிளர்ச்சிகள் முகபாவத்தின் தனிச்சிறப்பு ஆகும்.

உள்ளுணர்வுகளின் வெளிப்பாடுதான் உரையாடல். உள்ளக்கிளர்ச்சியாலேயே ஒரு மனிதனது வாழ்க்கைச் சக்திகள் இயங்குகின்றன. உள்ளக்கிளர்ச்சி உணர்ச்சி மிக்கவை. உள்ளக் கிளர்ச்சியின் செயற்பாடுகள் மூளையின் தூண்டுதல்களாலேயே நடைபெறுகின்றன. உளவியல் நோக்கில் உணர்வு என்பது உடலி னுள் நிகழும் நிகழ்வுகளின் புலனுணர்வுக் காட்சியே ஆகும். வூட்வேர்த் என்பவர்உணர்வும் உள்ளக்கிளர்ச்சியும் தனி ஒருவரின் உளநிலை என்கின்றார் மனிதனின் ஆளுமை முக்கியமாக பொறுப் புணர்ச்சி, சுதந்திரவுணர்ச்சி, பாதுகாப்புணர்ச்சி, அன்புணர்ச்சி, இன்பவுணர்ச்சி போன்றவைகளினால் வளர்ச்சியடைகிறது என்பது உளவியலாளரின் கருத்தாகும். இவை மனிதனை முழுமனித வளர்ச் சிக்கு இட்டுச் செல்கின்றன.

நாளாந்த வாழ்வில் மனித உள்ளங்களில் ஊற்றெடுக்கும் சில உணர்ச்சித் தோற்றங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அன்பு | அழுக்காறு | சோர்வு | ஆற்ருமை |
| பாசம் | அச்சம் | துக்கம் | பேராசை |
| காதல் | நாணம் | செருக்கு | மனநிறைவு |
| மகிழ்ச்சி | பயிர்ப்பு | இச்சை | குற்றவுணர்வு |
| ஆவல் | சலிப்பு | வெறுமை | நன்றியுணர்வு |

குழந்தைகள் நாடுவது உடலைச் சார்ந்த தொடுவுணர்வு குழந்தை இளமைப்பருவம் அடையும் போது தொடுவுணர்வு அகன்று அன்புணர்வு மேலெழுகின்றது. தொடுவுணர்வு ஆட்சிபுரிந்த இடத்தை பல்வேறு அன்புச் செயல்கள் ஆட்சிபுரியத் தொடங்குகின் றன. பின்னர் உடலும் உள்ளமும் முதிர்ச்சியடைந்து, இளைஞர் நிலையை எய்தும்போது அன்புணர்வு மதிப்புணர்வாக மலர்கின்றது உளவியல் சார்பான செயற்பாடுகளுக்கும் சங்கீதம் உதவுகிறது. சில குறிப்பிட்ட இராகங்கள் சில குறிப்பிட்ட உணர்ச்சிகளுடன் தொடர்புடையன. மனிதனுடைய மூளையில் தாலமஸ் என்ற நரம்புக் கேந்திரந்தான் மனிதனுடைய புலனறிவுக்கு, உணர்ச்சி வேகத்திற்கும் உற்பத்திஸ்தானம். ஒரு மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சங்கீதம் அதிக பாதிப்புக்களை உள்ளத்தில் ஏற்படுத்துகிறது என்று உளவியலாளர்கள் கூறுகிருர்கள்.

**ஊக்குவித்தல்**

வெளியிலிருந்து வரும் தூண்டல்களுக்கு மனத்தினுள் ளிருந்து இடை வினையாற்றும் உளநிலையே ஊக்குநிலையெனப்படும். உள்சார்ந்த, வெளிசார்ந்த தோற்றுவாய்கள் ஊக்க நிலையை உருவாக்கும். உணர்வு, நீர், மற்றும் உடல் தேவைகளே உடல் சார்ந்த தோற்றுவாயாகும். புறத்தேயுள்ள சூழ்நிலை விருப்பத்தை ஏற்று அறிந்து கொள்ளுதல் வெளிசார்ந்த தோற்றுவாயாகும். பொதுவாக சமூகத்தின் தன்மையால் ஊக்குநிலை ஏற்படும். ஊக்குநிலையானது இயல்புணர்ச்சி கொள்கை, உந்து கொள்கை. செயல்படுத்தும் கொள்கை. செயல்நோக்க கொள்கையா நான்கு அணுகு முறைகளை கொண்டுள்ளது.

1) இயல்புணர்ச்சி கொள்கையானது இயல்பான முன்சாபின் துலங்கலானது தனிப்பட்ட வழிகளில் உறுதியான தூண்டலால் ஏற்றவையாக கொள்ளப்பட்டது.

2) உந்து கொள்கையானது உணவு, நீர், பிராணவாயு, ஓய்வு, தூக்கம், குளிர் காலத்தில் வெப்பம், வெயில் நேரத்தில் தன்மை நோவு நீக்கம், இன்னும் பல உள்ளான ஈர்ப்புக்ளேயும் உள்ளடக்கியுள்ளது.

3) செயல்படுத்தல் கொள்கையானது செயற்படுத்தல் குறைவாகின் உயிர்பொருளின் ஈர்ப்பு மிகுதியாகவும் செயல்படுத்தல் கூடவாயின் உயிர்ப்பொருளில் ஈர்ப்பு குறைந்தும் இருப்பதாகும்.

4) செயல் நோக்க கொள்கையானது பிரத்தியேக துலங்களின் வெளிப்புற நிபந்தனையாக வற்புறுத்துகிறது. வெளியான தூண்டல்கள் பசி, உண்ணல் என்பவற்றின் அனுசரணையின் நடத்தையில் நிலைப்பாடுடையது. பசியானது எல்லா உயிர்ப்பொருளுக்கும் ஊக்குநிலையாகும். உணவு உண்ணும் செயலானது உடலியலிலும், சூழ்நிலையிலும், சமூக மாறிகளிலும் செல்வாக்குடையது.

மனிதன் பெறும் ஊக்குநிலையாவும், ஒன்று போலிருப்பதில்லை, மனிதவெழுச்சிகளேயும் அவற்றின் செயலேயும் பற்றி இலக்கியம், நாடகம், திரைப்படம் ஆகிய கலைகளில் திறம்பட எடுத்துக் கூறுகின்றனர். ஆனல் இவற்றில் உள்ளார்ந்த முறைகளேயே கையாளுகின்றனர். வெளிசார்ந்ததாக ஆராய்வதற்கு உளவியலின் துணையே அவசியம். ஒரு மனிதனது வாழ்க்கைச் சக்திகள் இயங்குவது உள்ளக்கிளர்ச்சியாலேயே, உள்ளக்கிளர்ச்சிகளால் தனியாளுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கும் நற்பயன் உண்டு. ஒரு உள்ளக்கிளர்ச்கி பல செயல்கள் மூலம் முற்றுப் பெறலாம்.

---

**உணர்ச்சியற்றவன் மனிதன் அல்ல. ஆனல் அவ்வுணர்ச்சிகளே தன்னேடு ஒருங்கமைத்து வாழும்போது அவன் முழு மனிதன் ஆகிறுன்.**

---

# சமூக நடத்தை 6

## சமூக நடத்தையும், சொல் சாரத தொடர்பும்

சமூக உளவியலில் நாம் எவ்வாறு சமூக சூழ்நிலையில் சிந்திக்கிறோம், உணர்கிறோம், செயலாக்கிறோம் என்பதுடன் எவ்வாறு இவைகள் சமூகசூழலில் செயற்படுகிறதென பயிலுவோம் சமூக உளவியலானது ஒரு நபரினதும் சமூக சூழலினதும் செயற்பாட்டின் நடத்தையின் புலக்காட்சியிலும் தங்கியுள்ளது.

சொல் சாராத தொடர்பானது உடற் செயற்பாட்டிலும் குரலிலும் தங்கியுள்ளது. இரு நபர்கள் இரு வேறுபட்ட மொழியை பயன்படுத்தும்பொழுது இவர்கள் சந்திக்கநேரிடின் ஒருவர் ஒருவரை விளங்கிக்கொள்வது சுலபமாக இராது, இருந்தும் இருநபர்களும் தங்களால் இயன்றளவு விளங்கிக்கொள்ளும் முறைகளாக 'ஆ' 'ஓ' என்ற குரலாலும் வேறுசெய்கைகளாலும் செயற்பட தள்ளப்படுவார்கள்.

உடம்பின் நிலையான இருத்தல், கைகளை சேர்த்தல், கால்களை குறுக்காக வைத்திருத்தல், நோக்குதல், நோக்காமல் இருத்தல் என்பவை ஒருநபர் தொடர்பு கொள்பவரின் செல்வாக்கை பிரதிபலிக்கிறது புறத்தூண்டல்களுக்குரிய உடம்பின் நிலைகளில் சில: திடீரென நகையில் விறைப்புண்டாதல், கைகளை தட்டுதல் மூக்கை தேய்தல், உதடு புருவம் முதலியவற்றைச் சுருக்குதல் ஆகும். குடும்பங்களில் உள்ளவர்கள் தங்களுக்குரிய இடம், பொருள் என்பவற்றை வேறொருவர் பயன்படுத்தின் அவ்நிகழ்ச்சியால் மனமடிவடைவார்கள். சில வேளைகளில் பிள்ளைகள் தங்களுக்கு உரியதென இடம், பொருள்களை பற்றிக் கொள்வார்கள். இவ்வாறு பொதுத்தளங்களிலும் நடைபெறுவதுண்டு.

இ.ரி.கோல் என்பவர் 3 தொடக்கம் 20 அங்குல இடைவெளியில் இருவர் நிற்பின் நெருங்கிய உறவுநிலையை தெரி

விக்கிறது, 2 தொடக்கம் 5 அடி இடைவெளியில் இருவர் நிற்பின் பொது முறையான தூரமாகும், 6 அடிக்கு கூடவாயின் பொது மக்களைக் காணும் தூரமாகும் எனக் கூறினர். எமது குடாநாட்டில் இருவர் நெருங்கி நிற்பின் பால்வேறுபாடு சார்ந்த நெருங்கிய உறவுநிலையென்ற பொதுக்கருத்து நிலவுகின்றது.

தொடுதல் என்பது உணர்ச்சிவயப்பட்ட ஆதாரமாகவுள்ள நிலையாகும். தொடுகைச் செயலானது உணர்ச்சிவயப்பட்ட உறுதி, அகநிலை ஊட்டம் என்பவற்றிற்கு வாய்க்காலாக அமைகிறது. உணர்ச்சிவசப்பட்ட, உளவியல்பு சார்ந்த உறுதி நிலையை தொடுகை மூலம் நாம் தெரிவிக்கிறோம். நபரின் குரலானது அவரின் உணர்ச்சிவயப்பட்ட நிலைகளை சுட்டிக்காட்ட உறுதுணையாகச் செயல்படுகிறது. சமுதாயப் பண்பாடுகள் முக்கியமாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

சமுதாயக்கூட்டான வளர்ச்சியானது தனித்துவமான உருவாக்குதல், பெற்றோருடன் உறவுமுறை, ஒத்த வயதானவர்களுடன் உறவுமுறை, புதுமலர்ச்சிப் பருவத்தில் பாற்தன்மை என்பவற்றை உள்ளடக்கியதாகும். வளரும் இளம்பருவத்தினர் இயல்பாகவே தலைமயிர் அலங்கரிப்பதிலும், புதுவகையான உடை அணிவதிலும் விருப்புக் கொள்வர். இக்காலப் பகுதியில் அநேகமான இளம் பருவத்தினர் பெற்றோருடன் அடிப்படை மதிப்பீடுகளைப் பற்றியும், நடத்தைகளைப் பற்றியும் கேள்வி எழுப்புவார்கள். ஒத்த வயதானவர்கள் இக்காலப் பகுதியில் பலவழிகளில் உதவியாக இருப்பார்கள் .எதிர்பாலாரின் நட்புறவு இப்பருவகாலத்தில் தீவிரமாக செயற்படும்.

ஒவ்வொரு சமுதாய அமைப்பிலும் கூட்டான அமைப்பின் ஒரு பகுதியாக பால்க்கவர்ச்சி கலாச்சாரத்தில் உள்ளது. இருபாலாரும் சிநேகபூர்வமான ஆரோக்கியமான தொடர்பு கொள்வதன் மூலம் பால்கலாசாரம் வளர்ச்சியடையும். ஆணும் பெண்ணும் இணைந்து பழகுவதற்கு ஆரோக்கியமற்ற சூழ்நிலை போன்றவை மனித ஒழுக்கம் கெடுவதற்கு சமுகக் குற்றங்கள் பெருகுவதற்கு

வாய்ப்பாக உள்ளது. சமுதாயக் கூட்டான கற்றலின் கோட்பாடு சூழ்நிலை நடத்தையின் அடிப்படைக்கூறு என வலியுறுத்தப்படு கிறது. அதிகமான பெற்றோரும் 20 வயதிற்குட்பட்ட இளவயதின ரும் நேருக்கு நேர் பழகுவது குறைவு. ஆனால் சொற்ப இளவயதினர் பெற்றோருடன் மிக அன்னியோன்னியமாக அன்புடன் பழகுகிறார் கள். மேலும் இன்றைய சமுதாயத்தில் பெண்களின் கூந்தலும், மார்பகமும், இடையுமே ஆண்களின் கவர்ச்சியாக செயற்படுவது போல ஆண்களின் மீசையும் பொருத்தமான உடற்கட்டமைப்புமே பெண்களின் கவர்ச்சியாக செயற்படுவதோடு, இளம் வயதினர் பெற்றோரிலும் பார்க்க பால் சார்ந்த அறிய கூடியவர்களாக இருக்கிறார்கள். (து. நூ 7 ப. 51)

அமைதியாய் இருத்தல் ஒரு வகையில் அறிவிருக்கும் செயலாகும். அதாவது ஆழ்ந்த சிந்தனையாகவும், தற்சோதனை யாகவும், தன் உள்ளத்தை தானே நுணுக்கிக் காணும் செயலாகவு இருக்கும். கஸ்டமான சூழலில் ஆய்வுரை நிகழ்த்தின் நீண்ட தூரம் உலாவி, அவ்வேளையில் பகிரின் இலகுவாக பிரச்சனையை அணுகலாம்.

மனித நடத்தைக்கும் சமூக நடத்தைக்கும் இடை யேயுள்ள தொடர்பு, மொழிவளர்ச்சியில் சிறப்பாக காணப்படு கிறது. தனிச் சிந்தனை முறைகளிலும் கூட சமூகப் பண்பு அமைந் துள்ளது. ஒருவரின் சமூக நடத்தையின் வளர்ச்சி அவன் தனியாள் திறனின் விருத்தியோடே கூடசேர்ந்து செயற்படுகிறது. எல்லா வயது நிலைகளிலும், சமூக நடத்தையானது அவனைச் சுற்றியுள்ள கலச்சாரத்தாலும், பழக்க வழக்கங்களாலும் பாதிக்கப்படும்.

---

படித்தவன் எல்லாம் பண்பாளன் அல்ல.
பண்பாளன் எல்லாம் படித்தவன் அல்ல.

---



253
Acc No. 244

# பால் வேறுபாடு சார்ந்த நடத்தை 7

## பால் வேறுபாடு சார்ந்த ஊக்குவித்தலும் நடத்தையும்

செயல் நோக்கமளிப்பவரின் ஆற்றலின் ஒத்த தன்மையின் ஒரு பகுதியே பால்வேறுபாட்டுணர்வாகும். பிரியம் இருக்கிறதோ, இல்லையோ இளமைக்காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலிலே ஒரு பசி ஏற்படுவது என்னவோ உண்மை. பசியின் தன்மை கருத்துவேறுபாடுடையதாகும். சில பேருக்கு வயதான பிற்பாடு அப்பசி நீடிக்கின்றது. ஆனல் அது வயிற்றினுடைய பசி அல்ல, சதையினுடைய பசி அதாவது வர்க்கப் பசி ஆகும். ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளும் போது அப்பசி தீர்ந்து விடுகிறது. கரு எவ்வாறு உயிர் பெறுகின்றதோ அவ்வாறே ஆண் பெண் உடலுறவு மறைரகசியமாகும். பால்வேறுபாடு சார்ந்த நடத்தையானது உட்புற ஆக்கக் கூறிலும் வெளிப்புற ஆக்கக் கூறிலும் தங்கியுள்ளது. உட்புற ஆக்கக் கூறனது கருவில் கலந்து, உறுப்புக்கள் செயற்படத்தூண்டும் உட்சுரப்பு நீர் வகைகளாலும் பிறப்பு மூலத்துக்குரிய ஆக்கக் கூறுகளாலும் தனித்தன்மை வாய்ந்தவையாக ஆண் அல்லது பெண்ணில் வளர்ச்சியடைகிறது. வெளிப்புற ஆக்கக் கூறனது நன்குணர்ந்த, நன்குணராத சூழலின் தூண்டுதலில் தங்கியுள்ளது.

1966 ஆம் ஆண்டு மாஸ்டாஸ், யோண்சன்ஸ் என்பவர்கள் மனிதனின் பால்வேறுபாடு சார்ந்த நடத்தையை நான்கு பகுதியாக வடிவமைத்தார்கள். அவையாவன உணர்ச்சியூக்கம் ஒப்பனைச்சின்னம் புணர்ச்சிப் பரவசநிலை உறுப்புக் கூறுபாடு ஆகும். பால்வேறுபாடு சார்ந்த உணர்ச்சியூக்கத்தின் ஆரம்பம் உட்புற அல்லது வெளிப்புற தூண்டுதல்களால் ஏற்படுகின்றது. உணர்ச்சியூக்க நிலையில் ஆண்கள் தங்களின் ஆண்குறி நிமிர்ந்து நிற்கும் அனுபவத்தை பெறுவர், பெண்களோ மார்பகத்தில் வீக்கமும், யோனிக்குழாயில் உராய்வுத்தடையும் இருப்பதாக அறிவர். இந்நிலையானதுகிட்டத்தட்ட ஒரு மணித்தியாலமாக நிகழும் சாத்தியக்கூறு ஏற்படலாம். (து. நூ 3, ப. 127) அடுத்த நிலைப்பாட்டில்

ஆண்குறி நிமிர்ந்து, விந்தை வெளியேற்றும் தருணத்தில் இருக்கும், பெண்ணில் பெண் குறியின் உட்புறத்திலே வழுவழுப்பான கசிவு ஏற்பட்ட பிறகு தான் கணவன்மனைவியுடன் உடலுறவு கொள்ள முயல வேண்டும். புணர்ச்சிப் பரவசநிலை ஏற்படும் போது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் அவரது உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அங்கங்கள் அனைத்தும் தாங்கொணாத பரவசம் அடைகின்றன. அவர் ஆணாக இருந்தால் விந்து வெளிப்பட்டு விடுகிறது, பெண்ணாக இருந்தால் எதுவும் வெளிப்படுவதில்லை. மேலும் ஆண் மகனுடைய புணர்ச்சி வேட்கையானது அவனது ஆண்குறியில் மட்டுமே ஒருமுனைப்பட்டிருக்கிறது, ஆனால் பெண்ணினுடைய புணர்ச்சிவேட்கை அவளது பெண்குறியில் மட்டும் ஒருமுனைப்பட்டு இருப்பதில்லை, அவளுடைய உடல் முழுவதும் பரவி இருக்கிறது. எனவே ஓர் ஆண்மகன் ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்ளும் போது முதலில் அவளுடைய உள்ளத்திலே அவன் பால் இச்சையைத் தோற்றுவிக்க வேண்டும். பிறகு அவளுடைய உடலிலே அவன் புணர்ச்சி வேட்கையைத் தோற்றுவிக்க வேண்டும். கட்டித்தழுவசல், முத்தமிடுதல் போன்ற காரியங்களின் மூலம் இச்சை தீவிரப்படுக்க வேண்டும். மேலும் பல்வேறு அங்கங்களிலும் பரவிக்கிடக்கும் இன்ப உணர்ச்சிகளை கிளறிவிட வேண்டும். அதாவது அந்தப் பெண்ணின் உடலில் உள்ள புணர்ச்சி வேட்கை அனைத்தும். அவளுடைய பெண்குறியிலே வந்து ஒரு முனைப்பட்டு இருக்கும் நிலையில் உடலுறவு கொள்ளின் இருவரும் இன்பத்தின் உச்சத்தை எய்திடுவர். (து. நூ 4. ப, 7) அடுத்த நிலைப்பாட்டில் இருவரும் பழைய நிலையை அடைவர். உணர்ச்சி திறனில் இருபாலாரும் ஒருவரையொருவர் கூடிக்குறைந்தவர்கள் அல்ல. உடலுறவு கொள்ளாவிடினும் இப்பரவசநிலை ஆண், பெண் இருபாலாரிலும் ஏற்படலாம். நித்திரை செய்யும் தருணம் விந்து நீர் வெளிப்படுதல் ஒருவரது விந்துநீர்ச் சுரப்பிகளின் ஒழுங்கான இயக்கத்தைக் காட்டுகிற ஒருநல்ல அடையாளமாகும். இளைஞர்கள் அதைப் பற்றிமகிழ்ச்சி அடையவேண்டுமேதவிர கவலையோ பயமோ கொள்வதற்கு இடமில்லை. ஆனால் இயற்கைக்கு மாறாக விந்துநீர் வெளிப்படுதல் உடம்மை பலவீனப்படுத்தி விடும். பெண்குறியின் இரண்டு உதடுகளுக்கு நடுவே, பெண்குறித் துவாரத்திற்கு மேலே வடிவமைப்பில் ஆண் குறிபோன்ற சின்னஞ்சிறு உறுப்பானது

உணர்ச்சிதிறனில் ஆண்குறிக்கு இது எந்தவிதத்திலும் குறைந்த தல்ல, இதனை கிளைரோறிஸ் என்பர். மேலும் பெண்குறியின் உட்புறத்தைக் காட்டிலும் சக்திவாய்ந்த உணர்ச்சிநரம்புகள் இதில் அமைந்திருக்கின்றன. ஆண்களின் ஆக்கிரமிக்கும் தன்மைகள் கை முட்டிக்குத்துதல், உள்ளங்கை அடியாகும். பெண்களின் ஆக்கிரமிக்கும் தன்மைகள் கிள்ளுதல், இழுபடுதலாகும். வெளிப்புறத் தூண்டல்களான தொடுதல், மணத்தல், பார்வை மூலம் எழுச்சியினை ஊக்குவிக்கலாம். உதாரணமாக இளைஞர் இளம்பெண்கள் பலவகையான சிற்றின்பப் படங்களை பார்த்தல் காட்சிசார்ந்த ஒரு வகைத் தூண்டலாகும்.

ஆணுடைய உடற்கூறு அவனை விரைவில் இன்ப உச்சம் எய்துவதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது. ஆணின் பாலுணர்வு இச்சை எக்காலும் செயற்படும். மாதவிடாயை ஒட்டிய ஒருசில நாட்கள் பெண்களுக்கு இயல்பாகவே உடல்வேட்கை தோன்றும். இந்நாட்கள் தவிர மற்றநாட்களில் பெண்களுக்கு இயல்பான உடல்வேட்கை ஏற்படுவது இல்லை அப்படி ஏற்பட்டாலும் முன்போல வேகமாக செயற்படாது. ஆண், பெண் இருபாலாரிலும் சுரக்கும் ஹார்மோன்கள் அவர்களுக்கு அழகை மெருகூட்டுவதோடு புணர்ச்சி வேட்கையையும் ஏற்படுத்துகிறது. உதடு, வாயின் உட்பகுதி, பிறப்புறுப்பு, காதுகள், தோல்மூடு, முலைக்காம்பு, தொப்பூழ், புயத்தின் உட்பகுதி, கை, ஆண்குறி, தொடையின் உட்பாகம், பாதங்களின் உள்ளங்கள் என்பன ஆண்களின் உடலில் பால்வேறுபாடு சார்ந்த கிளர்ச்சியூட்டுகிற புறத்தூண்டல் கருவிகளாகும். உதடு, வாயின் உட்பகுதி, மார்பும் முலைக்காம்பும், பிறப்புறுப்பு, காதுகள் கன்னம், இடுப்பு, உடலின் பின்புறத்தில் புடைப்பான பகுதி, கழுத்து, தோல்மூடு, புறத்தின் உட்பகுதி, கை, தொடையின் உட்பாகம், முழங்கால் மூட்டின் பின்பக்கம் என்பன பெண்களின் உடலில் பால்வேறுபாடு சார்ந்த கிளர்ச்சியூட்டுகிற புறத்தூண்டல் கருவிகளாகும். (து. நூ 5, ப. 111)

ஆணில் உணர்ச்சி ஏற்படும் போது பிறப்புறுப்பில் உருவாகும் திரவமும், உயிர் அணுக்கருவும் சேர்ந்து விந்தை

உருவாக்கிறது. அதில் 20 அல்லது 40 கோடி உயிர் அணுக்கள் உள்ளன. 72 மணித்தியாலம் கிட்டத்தட்ட உயிராக இருக்கும், பிறப்புறுப்பில் விந்தும் ஹார்மோன்களும் எவ்வேளையும் உருவாகும்.

பெண்ணின் கருப்பையில் கருமுட்டையும் ஹார்மோன் களும் உற்பத்தியாகின்றன. மாதவிலக்கிலிருந்து சாதாரணமாக 18 - 22நாட்களில் வெளிவரும் கருமுட்டை 48 மணித்தியாலங்கள் நஉயிருடனிருக்கும். உளவியலாளரின் கருத்துப்படி மாதவிடாய் காலப்பகுதியில் உடலுறவை தவிர்ப்பது உடல், உளரீதியில் ன்மைபயக்கும்எனக் கூறியுள்ளார்கள்.

பாலின் செல்வாக்கை ஏற்படுத்தும் உயிரணு மற்ற விரல்களுடன் ஒப்பிடும் போது சுட்டு விரலின் நீளத்துக்குப் பொருத்தமானதாக இருக்கும் என்று ஏ. எம். வின்செஸ்ரர் கூறு கிறார். சுட்டு விரல் நாலாம் விரலிலும் கட்டையாக இருக்கக் காரணமாயுள்ள உயிரணு ஆண்களில் அடங்கியதாகவும் பெண் களில் ஒதுங்கியதாகவும் இருக்கக் காணலாம். (து. நூ. 6, ப. 56)

திருமண வாழ்க்கை உறவுகள் மட்டுமன்றி இருபாலா ரும் சகஜமாக தூய உள்ளத்தோடு பழகும் நிலையில் உள்ள உறவு கள்கூட மகிழ்ச்சி தருவதாகவும் மனித வாழ்க்கையை வளப்படுத் துவதாகவும் உள்ளன. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இருபாலாரும் ஒருவருக்கொருவர் உதவுபவர்களாகவும், ஒருவரை ஒருவர் நேரிய பாதையில் ஊக்குவிப்பவர்களாகவும் உள்ளனர். இந்த நட்புறவினால் வாழ்க்கை பெருமளவு சிறக்கிறது.

---

சிறந்தவர்கள்

சிந்திக்கிறார்கள்

சிந்தித்தவர்கள்

சீர்தூக்கிப்பார்க்கிறார்கள்

சீர்தூக்கிப்பார்ப்பவர்கள்

சரிஎன்பார்கள்

---

# முடிவுரை 8

உளவியலானது விஞ்ஞானத் துறையைச் சார்ந்ததாகும். இது விஷேசமாகமனித நடத்தையை விளக்குவதோடு, நடத்தையின் பல்வேறுபட்ட தன்மையை விபரித்துக்கூற முயற்சிக்கின்றது. சில உளவியலாளர்கள் இயல்பு தொடர்பான தனிப்பட்டபிரச்சினைகளுக்குரிய மனித நடத்தையை விளக்கிக்கொள்ள ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் உளவியல்பு தொடர்பான அறிவாற்றலைப் பயன்படுத்துகிறார்கள்.

ஆரம்பகால உளவியலாளர்கள் மனித நடவடிக்கைகள் „திவிஷேட சக்தியாலும், மற்றும் நட்சத்திர கோள்களாலும் ஆட்கொள்ளப்படுவதாக கருதினார்கள். கிரேக்க மூதாதையர்கள் உடல் சார்ந்த உறுப்பான்மையாய நடத்தையின் காரணம் எனக் கூறினார்கள். 17ம் நூற்றாண்டில் கீழைத்தேசத்தவர்கள் சூழ்நிலைகள் மனிதநடத்தையை வரையறை செய்யும் காரணிகளில் ஒன்று எனக்கருதினார்கள். ஆனால் இன்றைய உளவியலாளர்கள் மனித நடத்தையானது உடல்சார்ந்த, சூழ்நிலைசார்ந்த, உளவியல்பு சார்ந்தவைகளில் ஒரு பின்னிப்பிணைந்த விளைவு எனக் கருதுகிறார்கள்.

நடத்தைக்கோலம் என்பது சூழ்நிலையாலே தனக்குள்ளே ஏற்படும் ஒரு உயிரி அநுசரிக்கும் செயல் தொடர்ச்சியாகும். சூழ்நிலை என்பது ஒருவரின் உயிர் உயிரணுக்களைத் தவிர அவரைப் பாதிக்கும் மற்றெல்லாப் பொருட்களாகும். ஒரு பொருளின் முன்பே நிற்பதால் மாத்திரம் சூழ்நிலையாகிவிட முடியாது. அது ஒருவரைத் தூண்டினால் தான் சூழ்நிலையாகும். மனிதனின் உடைகள் அவனது உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது. உடை அணிவதில் உள்ள மாறுபாடுகள் கவனக்குறைவுகள், முடி அலங்கரிக்கும் முறை, பாதஅணிகளின்நிலை இவையெல்லாம் கூட

உள்ளத்தை வெளிப்படுத்துகின்றன. எனவே இளைஞர்களும் இளம் யுவதிகளும் ஒழுக்கவியலுக்கு அமைவாக, ஆரோக்கியமான பொருத்தமான உடை அணிவது சாலச் சிறந்ததாகும்.

உள்ளக்கிளர்ச்சி என்னும் சொல் வெகுளி, அச்சம், மகிழ்ச்சி, இன்பம், துன்பம், வெறுப்பு போன்ற மெய்ப்பாட்டு நிலைகளைக் குறிப்பதாகும். உள்ளக்கிளர்ச்சியாலேயே ஒரு மனிதனது வாழ்க்கைச் சக்திகள் இயங்குகின்றன. வெளிப்படையாகப்பார்த்தால் பெண்கள் ஆண்களைக்காட்டிலும் உணர்ச்சிவசப்படுகின்றவர்கள் போலத்தெரியும். நொடிப்பொழுதில் கண்ணீர் வடித்து விடுவார்கள். ஆனால் கூர்ந்து அவதானித்தால் ஆடவருடைய உணர்ச்சிகள் மறைவானவை, ஆழமானவை, நெடுங்காலம் நிலைத்து நிற்பவை என உணரமுடியும். உள்ளக்கிளர்ச்சி உணர்ச்சி மிக்கவை. உள்ளக்கிளர்ச்சியை எம்மை மேற்கொள்ள நாம் அனுமதிக்கும் போதுதான் அதன்விளைவு எமக்கும் சமுதாயத்திற்கும் பாதகமாக அமைகின்றது. சோர்வு உணர்வுகளுக்கும் மகிழ்ச்சி உணர்வுகளுக்குமிடையே ஒற்றுமையான ஒரு கால நிர்ணய அளவு இருப்பதை நாம் உணர்வோம். இந்த உணர்ச்சி வட்டத்தின் கால அளவு மனிதருக்கு மனிதர் வேறுபடக்கூடும். இந்த உணர்ச்சி வட்ட செயற்பாடு பெண்கள் விடயத்தில் அவர்கள் மாதவிடாய் காலத்தை மையமாகக் கொண்டு இயங்குவதுண்டு. இயல்பாக இந்த உணர்ச்சி ஓட்டநிலை நமது உடல்நிலையைப் பொறுத்தவரை கூடவோ, குறையவோ செயற்படக்கூடும். உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய **ஆள், இடம்,** காலம் அறிந்து வெளிப்படுத்தப்படும் போது உண்மையில் அவை வழிப்படுத்தப்படுகின்றன.

சமூக வாழ்க்கையில் எதிர்ப்பால் வேட்கையின் வன்மையை யாவரும் அறிவர். இதன் வலிமை பசியின் வன்மையைப் போன்றதாகும். ஆண்கள் இயல்பாகவே உடலமைப்பின் பயனாக உடல் கிளர்ச்சிக்கு உட்பட்டவர்கள். அவர்கள் ஒரு பெண்ணை நாடும் பொழுது, அவளோடு பழகும் பொழுது பாலுறவுச் செயல்களில் ஈடுபட்டு பாலுறவு இன்பத்தைப் பருகவே தூண்டப்படுகிறார்கள். பெண்களோ அன்பையே இயல்பாக

நாடுபவர்கள் ஆண்களுக்கு அன்பு இல்லாமலில்லை. அது பெண்களின் அன்பு போன்று உணர்ச்சி மிகுதியுள்ளதன்று. ஆண்களோடு அவர்கள் பழகும் பொழுது அன்பையும் அமைதியும் தோழமையையும் நாடுகின்றார்கள். அவர்கள் ஏங்குவது அரவணைப்பிற்கும் அன்பின் அடையாளத்திற்கும் ஆகும். இந்த வேறுபாட்டை இரு பாலாரும் நன்கு அறிய வேண்டும்.

ஆண்மகன் ஒரு பெண்ணில் அக்கறை காட்டுகிறான் அவளை அடிக்கடி நோக்குகிறான், புன்முறுவலை உகிர்க்கிறான் இவற்றிற்கு அந்தப் பெண் தன் இயற்கைப் போக்கின்படி பொருள் கொடுத்து அவன் அன்பை ஏற்க அவாவுகின்றாள், அவனது நட்பு விரும்பத்தக்கதே எனத் தீர்மானிக்கிறாள். ஆகலால் இவளும் அவன் அன்பு நாட்டத்திற்கு விடை தந்ததுபோல் அவன் மீது அக்கறை கொள்கிறாள், அடிக்கடி குறுநகை செய்கிறாள், அவனை காணும் போதெல்லாம் அளவு மீறி வெட்கத்துடன் நாணுகிறாள். இந்தச் செயல்களைக் காணும் அவன் தன் இயற்கைப் போக்கின் படி இவற்றிற்குப் பொருள் தருகிறான் பாலுறவு இன்பத்தை அடைய அச்செயல்களுக்குத் தூண்டுகிறாள் என்று எண்ணுகிறான். இவ்வாறு இருவரும் தப்புக் கணக்குப் போட்டு நெருங்குகிறார்கள். மேலும் ஓர் ஆண்மகனுக்கு உள்ளத்திலே காதல் வேட்கை தோன்றிவிடுமானால் விரைவில் அது காதலாகவே செயலற்று, உடம்பில் புணர்ச்சி வேட்கையாக மாறிவிடும். ஆனால் பெண்ணில் அவ்வாறு அல்ல. அந்த வேட்கை எழுந்துவிட்டால் புணர்ந்தாலொழிய தீருவது கஷ்டம். ஆனால் வெறும் காதல் வேட்கையால் மட்டும் அவள் உள்ளம் பீடிக்கப்பட்டு இருக்கும் போது தன் காதலனைக் காண்பது கதைப்பது மற்றும் காரியங்களினால் அவள் மனநிறைவு அடைந்துவிடுவாள். மேலும் அவள் தன் காதலனோடு நெருங்கிப்பழகும் போது அவளுடைய புணர்ச்சி வேட்கைகள் சிறிது தூண்டப்பட்டுவிடுகின்றன,

இப்படியான அறிவு அற்றநிலையில்தான் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆதலால் இளைஞரும் இளம்யுவதிகளும் நெருங்கிப் பழகும்போது மின்சார சந்திப்புக்களில் ''அபாயம்''

என்று எழுதியிருக்கிறார்களல்லவா? அதனை நினைத்துக் கொண்டு பாலியல் தாக்கத்தினால் அபாயம் உண்டு என நடக்க வேண்டும். வயதான வாலிபனுக்கும் பெண்ணுக்கும் இனஉணர்ச்சி, பாலியல் கவர்ச்சி, வர்க்கப்பசி எடுப்பது தவறில்லை. திருமணத்தில் ஈடுபடும் வரையில் வர்க்கப்பசியை கட்டுப்படுத்த வேண்டும். தன்னடக்கமாய் இருக்க வேண்டும். திருமணத்தில் ஈடுபடாதோர் அதனை அடைந்தாலும் அடைய முயன்றாலும் இறைவனின் திட்டத்தை மீறுகிறார்கள். மனிதனிடம் எழும் சில இயல்புகளை அடக்கிக் கொள்வதால் அதனோடு தொடர்பான உணர்வுகளை முடக்கி, இயல்பாக எழும் நேர் கருத்துப்படியான ஆசைகளை அமுக்கிவைப்பதால் அவற்றின் செல்வாக்கினால் உந்தப்படும் போது அவன் பல்வேறு விதமான நடத்தையினூடாக அவற்றை வெளிப்படுத்த வேண்டியவனாகின்றான். அவன் எவ்வளவுதான் அவற்றை மறைக்க முயன்றாலும் அவனது நடத்தையினூடாக அது வெளிப்படவே செய்யும். மிகநுட்பமாக உளவியல் அணுகுமுறை கொண்டு அவதானித்தால் அவற்றை இனங்காணமுடியும்.

சகோதரவாஞ்சையுடன் பழகும் ஆண்கள் குறிப்பாய் பெண்களின் நலனில் அக்கறை காட்டுவார்கள். அவர்களின் தவறினைச் சுட்டித் திருத்துவார்கள். அவர்கள் செய்யும் தவறினைப் பெற்றோர், ஆசிரியர் அவர்களிடம் வெளிப்படையாக முறையிடுவார்கள் அவர்களுக்கு வழிகாட்டியாக நிற்பார்கள். ஆனால் அதே நேரத்தில் பெண்களின் ஆபாசத்தை ரசிக்கமாட்டார்கள். உடலை விரும்ப மாட்டார்கள். தனிமையில் சந்தித்து அக்கறை காட்டுவது போல பாசாங்கு பண்ணமாட்டார்கள். அநாகரிகமாய் உடற்பாகங்களைத் தொட்டு விளையாடி மகிழ்வை உண்டாக்கமாட்டார்கள். அநாவசியமாய் விலையுயர்ந்த பரிசுப் பொருட்களையும் பணத்தையும் கொடுக்கமாட்டார்கள். எப்போதும் புகழ்ந்து கொண்டேயிருக்கமாட்டார்கள். பொதுவாக உடன்பிறந்தாரைப் போல பிறர் சகோதரர்கள் ஆவது அரிதிலும் அரிது.

இருபாலரும் உடல்கட்டமைப்பில் மட்டுமன்றி உளவியல்பு தொடர்பான பண்பிலும் வித்தியாசப்படுகிறார்கள். எனது கருத்துப்படி பெண்கள் ஆண்களுடன் சமத்துவமாக முடியாது.

ஆனல் ஆண் ஆண்மையுடனும் பெண் பெண்மையுடனும் உள்ள சமத்துவம் இன்றியமையாததொன்றாகும் பெண்கள் தங்கள் உடல் சார்ந்த விதிமுறைகளுக்கு எதிராகவும் ஆண்களுடன் சமத்துவம் அடைய முடியாது. ஒரு பெண்ணின் பாதுகாப்பில் ஒரு ஆண் இல்லாவிட்டால் அந்த ஆணின் கதி அச்சாணியற்ற தேர் போல் ஆகிவிடும். அத்தகைய பெண் **தாயாக** இருக்கட்டும். **மனைவியாக** இருக்கட்டும், **சகோதரியாக** இருக்கட்டும், அவர்கள் சம்பந்தப் பட்ட ஆண்களை **அன்பு** என்ற அரவணைப்புக்குள் **பாசம்** என்ற கைப்பிடிக்குள் வைத்திருக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதே ஒவ்வொரு பெண்ணும் நன்கு உணர வேண்டும் என்பதே எனது ஆவல். பெண்கள் தமக்குரிய சிறப்பான குணங்களை வளர்த்து, தமது உள்ளச்சிறப்பைக் கண்டுபிடிக்காவிடில் ஆண்மகனின் வாழ்வில் தனக்குள்ள பங்கை நிறைவுச் செய்யவியலாது. மனிதத் தன்மையைக் காப்பாற்றும் தாயாக இருப்பவள் பெண். இதுவே அவள் மீது சம்பந்தப்படும் புனிதப்பணி. இதைச் செய்து முடிப்பது அவள் பொறுப்பாகும்.

பெண்கள் மிகுந்த சூட்சும அறிவு நிரம்பியவர்கள், அவர்களைப் பேதைகள் என்று எண்ணியும் நம்பியும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள் — சில ஆண்கள் என்பதே உண்மை. ஆண்களின் ஒவ்வொரு அசைவையும் அவர்கள் மிகுந்த நுணுக்கமாக அவதானிக்கிறார்கள். அவர்களின் ஒவ்வொரு அடியும் எதை நோக்கி வைக்கப்படுகிறது என்பதை துல்லியமாக உணர்ந்து கொள்ள பெண்களால் முடியும். வெகுளி என்றும், ஒன்றும் அறியாதவர்கள் என்றும் ஆண்களால் சுட்டிக் கருதப்படும் பெண்கள் கூட, தங்கள் அந்தரங்கங்களுக்குள் அவர்கள் விழித்துக் கொள்வதை ஆண்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை என்பதே சில ஆண்களின் சோகம்.

இளவல் ஒருவனுக்கு தனிப்பட்ட ஓர் இளம் பெண்ணிடம் ஒருவிதபரிவு, வாஞ்சை, அன்பு தோன்றிக் காதலாய் மலராது என்று நான் கூறவில்லை. பலகாலமாய், சிலவேளை, சிறு பராயம் தொடங்கி ஒருவர் ஒருவரை அறிந்திருக்கலாம். இவர்கள் குடும்பங்கள் பலவிதத்தில் ஏற்கனவே இணைந்திருக்கலாம். வெளியே ஒன்றும் காட்டிக் கொள்ளாவிட்டாலும், இவர்களின் வாழ்க்கை

இறைவன் முன்னிலையில் ஒன்றுபட்டு நெருங்கிக் கொண்டிருக்கலாம். இத்தகைய நிலையிலும் இளைஞன் செய்யவேண்டியவை: தன் உள்ளத்தில் அரும்பும் அந்த அன்பு முளையைக் கவனமாய் போற்றி வளர், போட்டு அலட்டாதே, காட்டாமல் காட்டி அன்பு செய்யும் அம்மங்கைக்கு உகந்தவன் ஆக முயற்சி எடு. ஆகவே படிப்பிலே ஆர்வம் தோன்றட்டும். ஒழுக்கம் சிறக்கட்டும், உன் உடற்கட்டு மிளிரட்டும், இயல்பூக்கம் பூரிப்படையட்டும், அனைவருக்கும் காட்டும் பற்று, பணி பெருகட்டும் அறநெறி நடத்தும் பெரியோரிடம் உன் மெய்ப்பாடுகளை விளக்கி அறிவுரை பெற்று வாழ்க்கை நடாத்துவாய்.

இன்னொரு வழியாக ஒரு பெண்ணுக்கு உன்னைப் பிடித்திருக்கலாம். வாஞ்சையும் பரிவும் அவள் காட்டியிருக்கலாம். இருப்பினும் நீ விரும்பின் உன் அன்பை அவளுக்கு விரைவில் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் வேறு யாராவது அவளைக் கவர்ந்து கொண்டுபோய் விடுவார்களே என்று நீ ஏங்காதே. இப்படித்தான் இளைஞர் பலர், தங்களுடைமை தப்பிவிடப்போகிறதே என்று நினைக்கின்றனர். பேசுகின்றனர். நீயோ அமைதியாய் இரு, உண்மையான அன்பு ஆழமானது. சிக்கலானது அருமையானது அந்த ஆழ்ந்த அன்பைப்பெற, வெறும் உள உணர்ச்சியைக் காட்டினால் மட்டும் போகாது. எனவே நீ உனக்கே இவ்விதம் கூறிக்கொள், இந்த இளம்பெண் மற்றவர்களை விட என்னை மேலாய் எண்ணுகிறாள், உயர்ந்தவன், நெறியாளன், சமூகச் சிறப்பு எனக் கருதுகிறாள். அந்த நற்பண்புகள் என்னிடம் சிறந்தமுறையில் துலங்க வேண்டும். அவள் விரும்பும் உடல், உளப்பண்புகள் அனைத்தையும் நான் அடைய முயலுவேன். நல் அறிவு, ஒழுக்கம் கடைப்பிடித்து குணங்களில் சிறந்தோங்க தேடுவேன். அச்சமின்றிக் காத்திருப்பேன், அந்தப் பொன்னாள் நெருங்கும் வரை.....அவள் உண்மையாகவே என்னை அன்பு செய்தால், ஒரு சில ஆண்டுகள் காத்திருக்கத் தயங்காள்.....இறைவன் சித்தமானல் என்னுடைய அவளுடைய முதிர்ச்சி நிலைகள் முதிர்ச்சியடையும் தருணம் ஒன்றுபடவகை கூடும்.

பால் முதிர்ச்சி ஏற்பட்டவுடன் ஆண்களின் ஆர்வம் பெண்களையும், பெண்களின் ஆர்வம் ஆண்களையும் நோக்கித் திரும்புகிறது. இந்த ஆர்வத்தை புறச்செயல்களால் காண்பிக்கிறோம்.

நம்மை ஆணும் பெண்ணுமாகப் படைத்த கடவுள் நாம் எதிர்ப்பால் வகுப்பைச் சேர்ந்தவர்களிடம் நல்ல நட்பு கொள்வதற்கான நம்முடைய விருப்பங்களை அடக்கி வைக்காமல், விருப்பம் அளவு கடந்து விடாதபடி அதை ஒழுங்குபடுத்தி செயல்படும் தன்மையை தந்துள்ளார். எதிர்ப்பால் இனத்தவர் ஒருவரோடு அளவுக்குமீறி நட்புக் கொள்ளும்போது தான் ஆபத்துவருகிறது. அதே சமயத்தில் அவர்களோடு நல்ல நட்புறவு கொள்ளாமல் விலகிச் செல்வதும் ஆபத்தை உருவாக்கும். சிலர் எதிர்ப்பாலாரோடு பேசாமல் இருந்துவிடுவது ஓர் உயர்ந்த நிலை என்று நினைக்கிறார்கள். இது இயற்கைக்கு மாறான ஒரு தன்மையை காட்டுகிறது. இத்தகைய எண்ணங்கள் இரகசிய பாவங்களை தோற்றுவிக்க வழிவகுக்கலாம். எதிர்ப்பாலாரோடு பழகி வருபவர்களைவிட ஒத்தபாலினத்தவரோடு மட்டும் பழகி வருபவர்கள் பலர் ஒழுக்கக் கேடாய் இருப்பதற்கு இது ஒரு காரணமாகும். பல சமயத் துறவிகள் ஒழுக்கந்தவறிப் போவதற்கும் இது ஒரு காரணமாகும். ஆகவே எதிர்ப்பாலாரோடு எப்படி வேண்டுமானாலும் பழகலாம் என்று தப்பிப்பிராயம் கொள்ளவேண்டாம். அது நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு வழிவகுக்கும். எனது கருத்துப்படி நாம் எதிர்ப்பாலாரின் உறவு நிலையில் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ வேண்டும். அதாவது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் உதவுபவர்களாகவும் ஒருவரையொருவர் ஊக்குவிக்கும் நல்ல நட்புறவினால் வாழ்க்கை பெருமளவு சிறக்கிறது.

எமது சமுதாயத்தில் பெண் இனத்தைப் பற்றியே சிலருக்குத் தவறான கருத்தோட்டம் உண்டு. பெண் என்பவள் ஒரு அழிவுச்சக்தி என்றும் பெண்களுடன் தொடர்பு கொள்வதே பாவ காரியம் என்பது போல கருத்தும் இடம்பெறுகின்றது. சின்னவயதிலிருந்தே சிலர் மனதில் வெறும் வேதாந்த சித்தாந்தக் கருத்துகள் இதற்குக் காரணமாக இருக்கலாம் அல்லது இவர்களாகத் தவறாக அந்த மாதிரியெல்லாம் கற்பனை செய்திருக்கலாம். பெண்மை இகழ்ச்சிக்குரியதோ கேலிக்குரியதோ அன்று மதிக்கப்படத்தக்கது. இறைவனின் படைப்பின் வெளிப்பாட்டிலே பெண்மையின்றி உலகம் முழுமையடைய முடியாது. பெண்மையே உலகிற்கு முழுமை தருவது பிரதிபலிக்கிறது. அவ்வாறு முழுமை தரு

வதை நிறைவாகவே கருத வேண்டும். **பெண்மை எங்கு மதிக்கப் படுகின்றதோ அங்கேதான் முழுமையான உரிமை பெற்ற சமுதாயம் உருவாக முடியும்.**

திருமணம் ஒன்றுதான் பாலியல் இன்பத்தை முறையாகப் பெறுவதற்கான சரியான வழி என்ற உணர்வு மனத்தில் இருக்க வேண்டும். திருமணத்தின் மூலம் தங்குதடையற்ற பாலியல் இன்பத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு நிச்சயமாக இருக்கும் போது சுய இன்பம் போன்ற தீய பழக்கங்களுக்கு இடமளிக்க வேண்டிய அவசியமேயில்லை என்பதை இளைஞர்களும் இளம் யுவதிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்மை இன்பத்தை அனுபவித்து மகிழ்வதற்கு எவ்வளவோ அவகாசமும் வயதும் இருக்கின்றது. அவசரப்பட்டு இளவயதிலேயே பெண்மை இன்பத்தை அனுபவிக்க விழைவது புலனடக்கமற்ற போக்கும் அறிவீனமுமாகும்.

**என் அருமைச் சகோதரிகளே!** பெண்ணைப் பிறந்தவளின் தலைசிறந்த பேறு தாய்மையே! தாய்மையில் தனிப்பெருமை கொள்ள வேண்டும். இவ்வுலகில் உங்களது அரிய பணி தாய்மையிருப்பது என்பதை உணர்ந்து, உவகை பூக்க வேண்டும். தாயின் பதவி எவ்வளவு சிறந்தது, உயர்ந்தது. ஒவ்வொரு சகோதரியும் அந்தத் தாய்க்கு உரியவர்கள். இன்றைய சகோதரிகள் நாளையத் தாய்மார். எனவே தன்னை இளைஞர்களின் விளையாட்டுப் பொம்மைகளாக்கிக் கொள்ளாது, அன்பைச் சிதறவிடாது உங்கள் வாழ்க்கை அந்தஸ்துக்கு ஏற்ற விதத்தில் செயற்பட ஆசிக்கிறேன்.

**என் அருமைச் சகோதரர்களே!** பெண்களை இழிவாகக் கருதாது ஏளனம் செய்யாது, அன்பைச் சிதறவிடாது உங்கள் வாழ்க்கை அந்தஸ்துக்கு ஏற்ற விதத்தில் செயற்பட ஆசிக்கிறேன். திருமணவாழ்வு எத்துணை சிறப்பான வாழ்வு, அதற்குஇளைஞர்களும் இளம்யுவதிகளும் ஆயத்தம் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல உடல்வலிமையுடன் இருக்க முயல வேண்டும். இறையன்பு, பிறரன்பு தியாகமனப்பான்மையுடன் வளர வேண்டும்.

பாடசாலைகள், கல்லூரிகள் மற்றும் பொதுநிலையங்களில் ஆரோக்கியமான ஆண் பெண் நட்புறவை ஊக்குவித்தால் தூய்மையான சந்தோஷத்தை உடல் சார்ந்த, உளவியல் சார்ந்த, ஆன்ம இயல்பு சார்ந்த முறையில் நாம் பெறமுடியும் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டும் என்பதே எனது ஆவல். இளைஞர்கள் இளமையை முன்னிட்டோ அல்லது மகிழ்ச்சி, உண்மை, அழகு. அன்பு இவற்றின் மீது அவர்களுக்குள்ள ஆழ்ந்த விருப்புக்களையிட்டோ கலங்க வேண்டிய சாத்தியக்கூறு இல்லை என்பதே எனது கருத்தாகும்.

வருங்காலத்தில் யாராவது உளவியலாளர்கள் எமது நாட்டில் தோன்றியோ அல்லது வேறு நாட்டினரோ பலவழிகளில் உளவியல் சார்ந்த ஆய்வை மேற்கொண்டு அதற்கொப்ப மேலை நாட்டவரின் கோட்பாடுகளில் சில பகுதியை நீக்கியோ அல்லது இணைத்தோ அல்லது செப்பம்செய்தோ எம்நாட்டின் சமுகாயத்திற்கேற்பஅக்கோட்பாட்டைப் புதுப்பிக்கும் தருணம் அவ்விதிகள் பொருத்தமாக இருக்கும். எனவே நான் அடிப்படை உளவியல் தத்துவங்களைத் தவிர மற்றவைகளை ஏற்க முடியாத நிலையில் உள்ளேன்.

அண்மைக் காலங்களில் உலகின் பலபாகங்களிலும் உளவியலின் பயனாலும், ஆராட்சியாலும் சமூகப்பிரச்சனைகள் அவற்றின் காரணம், போக்கு ஆகியவற்றைப் பற்றித் தெளிவு ஏற்பட்டுள்ளது. உன்னையே அறிந்து கொள் என்பது ஆன்றோரின் வாக்கு நமது உடல் எழுச்சி, உள எழுச்சி, சமூக சிந்தனை ஆகியவற்றில் எழும் தேவைகளை உணர்ந்து நாம் நமக்கும் சமுதாயத்துக்கும் ஏற்றவர்களாக ஒழுக வெவ்வேறு வழிமுறைகளை உளவியல் காட்டுகிறது. பிறரோடு இசைந்து வாழவேண்டுமானால் அவர்களது எண்ணம், உணர்ச்சி, செயல் ஆகியவற்றிற்குரிய காரணம் நமக்குத் தெரிய வேண்டும். அதாவது சொல், பார்வை, செயல் ஆகியற்றிற்குரிய காரணம் நமக்குத் தெரிய வேண்டும்.

இளமைக் கால அனுபவ அறிவே வாழ்க்கையின் எதிர்காலத்தை நிச்சயிக்கிறது எனலாம். வாழ்க்கை நிலையை உரு வாக்கி நடத்தையைக் கட்டுப்படுத்துவதும் இதுவே. இளம் பராயத் தில் நம் உள்ளங்களில் இளமைததும்பும் ஆசைகள், துடிப்புகள், எதிர்பார்ப்புகள், உணர்ச்சிகள் வடிவெடித்து இருக்கும். இறைவ னின் படைப்பு எல்லாம் இன்பத்தின் இருப்பிடமாகத்தான் இரு க்கிறது. இன்பத்தைப் புரிந்து கொள்வதிலே, இன்பத்தை உணர் வதிலே, இன்பத்தை அனுபவிப்பதிலே ஒரு பக்குவநிலையை அடை யாவிடத்துதான் துன்பம், துயரம் என்று பிரச்சனைகள் உருவா கின்றன. நமது இயல்பான உணர்வுகளுக்கும், நாம் தீர்மானத் துத் தெரிந்து கொள்ளும் கொள்கைகளுக்கும் ஒன்றிய உறவை ஏற்படுத்திக் கொள்வது முக்கியம், அல்லாவிடில் நம் உளநிலை பாதிக்கப்படுகின்றது. எனவே நாம் நமது இயல்பான உணர்ச்சிக ளுடன் நேரிய உள்ளத்துடன் பழக வேண்டும். இவ்வாறு முழுமை பெற்றபின் சக்தி வாய்ந்த உள்ளத்திலிருந்து எடுக்கப்படும் முடி வுகள் வலிமையும் ஆக்கமும் உள்ளவைகளாக அமைவதை உணர லாம். மேலும் இன்றைய உளவியல் ஒருவனை அவன் நல்லவன் என்னும் உண்மையை ஏற்க வைப்பதையே தன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்களது இயற்கை யான உடலியல், உளவியல்பு சார்ந்ததுமான உண்மையையும் அவற்றை மலர்ச்சியுறும் நேர்க் கருத்துப் படியான வழிகளில்ந செயல்வடிவமாக்கியும் காண வேண்டுமென நான் ஆசிக்கிறேன்.

---

**கருத்து நேர்மையுள்ளதாயின்யாராலும் அழிக்க இயலாது.**
**நேர்மையற்றதாயின்யாராலும் நிலைநிறுத்தவும் இயலாது.**

---

# பின்னிணைப்பு 9

இக்காலத்தில் தொடர்புச் சாதனங்கள் மூலம் கூடுதலான பாலுறவும், மண வாழ்க்கையும் பற்றிப் பல்வேறு நேர், எதிர் மறைவான கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. இதனால் மனிதன் தனது வாழ்க்கையில் மாற்றம் செய்திட எண்ணுகின்முன். மணவாழ்க்கை ஏதோ உடை உடுத்துவது போன்ற நிகழ்ச்சியன்று வாழ்விலே ஒரு முக்கிய கட்டம், திருமண வாழ்வில் வெற்றி என்றால் வாழ்க்கையில் வெற்றி உண்டு. ஆதலால் மணவாழ்க்கைக்கு ஆயத்தம் இன்றியமையாதது, எனவே திருமணவாழ்விற்கு யாதொரு ஆயத்தமுமில்லாமல் செய்வது எவ்வளவு அறியாமை. மனித நடத்தையைப் பற்றி ஒரு புள்ளி விபர ஆய்வை கடந்த இரு வருடங்களில் 2000 குடும்பங்களில் மேற்கொண்டேன். மேலும் 1950க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த 2500 இளைஞர்களையும் யுவதிகளையும் சந்தித்து எனது ஆய்வை மேற்கொண்டேன். இவ்வாறான எனது செயல்பாடுகளின் தூண்டுதலினால் இச்சிறு கட்டுரையில் திருமண வாழ்க்கைக்கு ஆயத்தமாக சில உண்மைகளை என் அருமைச் சகோதர சகோதரிகளுடன் பகிர முயலுகிறேன்.

## ஏன் இந்த வேறுபாடு ?

பதின்மூன்று, பதினான்கு வயதை எட்டியவுடன் இளைஞனின் கண்கள் பெண்களை கூர்ந்து நோக்கத் தொடங்குகின்றன, அவர்கள் மீது ஒரு கவர்ச்சி ஏற்படுகிறது. அவன் உள்ளத்தில் உவகைபூத்து கடவுள் ஏன் தான் பெண்களை உண்டாக்கினாரோ? என்று வினவை எழுப்புகிறான்.

அந்த வயதில் இளம் பெண்களோ இளைஞரைப் பார்க்க அவா கொள்கிறார்கள். உள்ளத்தில் ஒரு வகை இன்பஉணர்ச்சியை உணர்கிறார்கள். கடவுள் ஏன் தான் ஆண்களை உண்டாக்கினாரோ? என்று அவர்களும் வினா எழுப்புகிறார்கள்.

கடவுள் ஆணையும் பெண்ணையும் உண்டாக்கியது அவரது அளவில்லா நன்மைத் தன்மையின் பயனே ஆகும். இறைவனின் திட்டம் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் தன்னலமற்ற அன்புடன் நேசித்து, ஈருடல் ஓர் உயிராக வாழ்ந்து தங்கள் அன்பின் கனிகளாகத் தங்களையொத்த குழந்தைகளைப் பெறவேண்டும் என்பதேயாகும். மணவாழ்க்கை கேலிக்கைக்கும், வேடிக்கைக்கும் உரியதன்று. நாம் அவ்வாழ்க்கையை இறைவன் அருளிய நல்வாழ்க்கையாகக் கண்ணியத்துடன் நோக்க வேண்டும். எதிர் பாலாரின் மேல் அன்பு மலர மனதில் ஏகிறவர்கள் தங்கள் வாழ்க்கை அந்தஸ்தைத் தெரிவு செய்ய முதிர்ச்சியடைந்தவர்கள் என்பது புள்ளிவிபரவியல் தொடர்புபடுத்தல்குணகத்தின் மூலம் உறுதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவைத் தந்துள்ளது.

## இருவகைப் பசி

மனிதனுக்கு இறைவன் இரண்டு வகையான பசியைக் கொடுத்திருக்கிறார், ஒன்று **வயிற்றுப்பசி** மற்றொன்று **வர்க்கப்பசி** வயிற்றுப் பசி தனி மனிதன் உண்டு, உயிர்வாழ உதவுகிறது. வர்க்கப்பசியோ மானிட வர்க்கம் பிழைத்திருக்க உதவுகிறது.

வயிறு காலா காலத்தில் பசிப்பது இயல்பு. அதுவே முறை அது உடல் நலத்தைக் காட்டுகிறது. அவ்வாறு பசிப்பது தவறில்லை. அது போல வயதான இளைஞனுக்கும் பெண்ணுக்கும் இன உணர்ச்சி பாலியல் கவர்ச்சி, வர்க்கப் பசி எடுப்பது தவறில்லை. திருமணத்தில் ஈடுபடும் வரையில் அந்த வர்க்கப் பசியைக் கட்டுப் படுத்த வேண்டும். தன்னடக்கமாய் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு உறுப்பும் தன் பொருளை நாடிச் செல்கிறது. இதுவேஇயல்பு. அப்படியானால் மனுக்குலத்தைப் பெருக்குவதற்காகப் படைக்கப்பட்ட உறுப்புக்கள் தமக்குரிய செயல் நாடிச் செல்லாமல் இருக்குமா? ஆண் பெண்ணில் கவர்ச்சியடைகின்றான். பெண் ஆணில் கவர்ச்சியடைகின்றாள். இக்கவர்ச்சி தவறன்று, திருமணத்தில் இல்லாத போது தம் விருப்பம் போல் அது நாடும் செயல் அடைவது தான் தவறு.

## தடுமாறுதே

மண வாழ்க்கையில் இல்லாதவன், உடலின்பத்தை நேரடியாக நாடுவதும் அதனை ஏற்பதும் தவறு. அது தீவினையாகும். அறிந்தும், வலிய முழு மனத்துடன், உடல் இன்பத்திற்கு இணங்கச் செய்யக் கூடிய கிட்டிய அபத்தில் ஒருவன் தன்னையே உட்படுத்திக் கொள்வது தவறு. நீ குளிக்கிறாய், அது நல்ல செயல். உன்னை மீறி ஏதாகிலும் இன்ப உணர்ச்சி ஏற்பட்டால் அதை அசட்டை செய் ஆதரிக்காதே. இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் இந்த பாலியல் அவா நாட்டம் மிக வலிமையுள்ளது. அதனைக் கட்டுப்படுத்தாது விலங்குகளைப் போல ஆளப்பட அனுமதித்தால் நாம் விலங்குகளிலும் கேடு கெட்ட விலங்குகளாவோம். எமக்கு வரும் சோதனைகளில் மூன்று படிகள் உள:- முதலில் தூண்டு பொருள், இரண்டாவது நமது மனவெழுச்சியின் விடை, மூன்றாவது செயல் ஆகும். நேர்க்கருத்துடன் இவற்றைச் செய்யின் அதன் பெறுமதியை அனுபவிக்கலாம்.

## குடும்ப அமைப்பு (திருமணம்)

எமது சமுதாயத்தில் சீதனம், மற்பணம் என்னும் பல காரணிகளால் திருமணம் ஒரு சந்தைப் பொருளாக உருவாகிக் கொண்டு வருவதை எல்லோரும் நன்கு அறிவோம். ஆண்கள், நற்குணமுள்ள பெண் சாதாரண நிலையில் வாழும் பெண்ணாகஇருந்தாலும் பரவாயில்லை என்று திருமணம் செய்ய மன் வர வேண்டும். பெண்கள், நான் சாகும் வரை கன்னிப் பெண்ணாய் இருந்தாலும் இருப்பேனேயொழிய, விலை கேட்டு என்னை இழிவு படுத்தும் ஆண் எனக்கு வேண்டாமென்று ஒரே உறுதியாய் சொல்ல வேண்டும். இவ்வாறு தீர்மானத்துடன் இருந்தால் சமூகம் சீர்படுமல்லவா? சாதாரண நிலையில் வாழும் பெண்களுக்கும் வாழ வாய்ப்பு கிட்டுமல்லவா?

மனிசனின் இளமைப் பருவத்தில் எழுகின்ற உணர்வுகள் உரிமை பெறுகின்ற வாய்பானது அவன் வாழுகின்ற சூழலில் தங்கியுள்ளது. திருமணத்தில் இணைப்புப் பாலமாக அமைவது உணர்வு. இவ்வுணர்வு நிலையில் ஒருவரை ஒருவர் புரிந்து

ணர்வு கொள்ளாவிட்டால்சட்டம் தந்த உரிமையோ அதனல் வந்த உறவோ செயலற்று விடுகிறது.

கலாச்சாரம், பண்பாடு என்பது நாட்டுக்கு நாடு வேறுபட்டது. அவ்வாறே நாட்டுக்கு நாடு ஆண்கள் பெண்களின் மேல் கொண்டுள்ள கவர்ச்சியும் வேறுபாடுடையதாகும். அதாவது ஆண்களின் கவர்ச்சிக்குறி யப்பான், சீன ஆகிய நாடுகளில் பெண்களின் பாதங்களிலும் மேல் நாடுகளில் அநேகமாக பெண் குறியிலும் ஆபிரிக்க நாடுகளில் பெண்குறியிலும் செயல்படுவதாக உளவியலாளர்கள் கூறியுள்ளார்கள் இதை அடிப்படையாகக் கொண்டே தொடர்புச் சாதனங்களில் பெண்களின் உடை அமைப்பை அரை நிர்வாணமாகவும் அரை குறையாகவும் படங்களை பிரசுரித்தோ அல்லது விளம்பரதாரர்களாகவோ பயன்படுத்துகிறார்கள். ஆனல் எமது சமுதாயத்தில் அநேகமாக பெண்களின் கூந்தலும், மார்பகமும், இடையுமே ஆண்களின் கவர்ச்சியாக செயல்படுவதை நாம் அறிவோம். இதற்கொப்பவே தொடர்புச்சாதனங்களில் எம் சமுதாயத்தில் பெண்களை உபயோகிக்க வேண்டும். ஆனல் நடைமுறையில் அநேகமாக மேலை நாட்டவரின் விளம்பரப் பிரசுரங்களையே பயன்படுத்துகிறேம். இவற்றை வியாபாரத் தளங்களில் பாவிக்கும் போது அங்கு விநியோகஸ்தர்களாக கூடுதலான பெண்களே நிற்கிருர்கள். இது நியாயமா? உங்கள் பணியத்தில் தொடர்பு கொண்டு நேரிய முறையில் செயற்பட முயற்சியுங்கள் சிந்தியுங்கள்? செயற்படுங்கள்.

இயற்கை அன்னை இயல்பாகவே அந்தி மாலைப் பொழுதை அணுகும் வேளையில் ஆண் பெண் பால் ஹோர்மோன்கள் அதிக தொழிற்பாட்டை பெறுவதோடு துயில் கொள்ளும் பொழுது இவை புதுப்பிக்கப்படும் என்று மருத்துவ நூலர் கொள்கை. சைக்கிள் ஓடும் தருணம் உறுப்பு உணர்வு சிறப்பாக (பெண்கள்) ஊக்கத்தினை பெறுவதை அறிவீரன்றே. ஆதலால் மாலைப் பொழுதில் சைக்கிள் பிரயாணம் செய்வதை நிறுத்துவது சாலச்சிறந்ததாகும்.

இயல்பாக பாலுணர்வு ஏற்படும் போது அதன் வெளிப்பாட்டில் ஒன்ருக மார்பகச் செயற்பாடென்பது உளவிய

லாளரின் கருத்தாகும். எனவே எளிமையான முறையில் பெண்கள் உடை அணிவது அவர்களின் அழகை நிச்சயமாக குறைக்க மாட்டாது என்பதை அவர்கள் மனதில் கொண்டு மார்பகங்களை காட்டுவதையோ, அன்றேல் இடையின் இடைவெளியைக் கூட்டுவதையோ தவிர்த்துக் கொள்ளல் உண்மையான அழகை நிலை நாட்டுவதற்கு வழியமைக்கும். மேலும் ஆண்களை உடல் கவர்ச்சி மூலம் கவர முக்கியத்துவம் கொடுப்பின் பெண் அடிமை நிலவ வாய்ப்பு உறுதியாக உண்டு. உள்ளக் கவர்ச்சி மூலம் கவர முக்கியத்துவம் கொடுப்பின் பெண் அடிமைத்தனம் தோன்றாது உடல், உள்ளக் கவர்ச்சி மூலம் கவர முயலின் பெண் அடிமை நிலவ வாய்ப்பு உண்டு எனலாம் ஒரு பொருள் தன் நிலைப்பாட்டில் இருந்து விலகின் அது ஏதோ ஒன்றுக்கு கீழ்ப்பட்டோ அல்லது மேற்பட்டோ இருக்க நேரிடும். அதாவது பெண்களின் உடல் அழகு சொற்ப காலம் மட்டும் செயல்படும். அதன்பின் அதன் தன்மை குன்றும் என்பதை அறிவீரன்றோ. சமுதாயத்தில் உடல் அழகுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் பிரதிபலிப்பாக மனித நடத்தையில் சில ஆண்கள் தம் மனைவியரை பல விதங்களில் அடிமைப் போக்கில் வாழ்க்கை நடத்துகிறார்கள். இதற்கு மாறாக உள்ளக் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் பிரதிபலிப்பாக, சமுதாயத்தில் சிலபெண்கள் தாம் பணிபுரியும் தளங்களில் மற்றவர்களுக்கு ஆறுதலாகவும் தேறுதலாகவும் செயற்படுகிறார்கள்.

இறைவனே மனிதனை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார். வேறுபட்ட உடலமைப்புடன் அவர்களை உண்டாக்கியிருக்கிறார். வயதான இளைஞனுக்கும் இளம் யுவதிக்கும் இளமையிற் கவர்ச்சி ஏற்படுகிறது. இவற்றின் தொடர்ச்சி திருமணத்தில் ஈடுபடச் செய்கிறது. பாலியல் கவர்ச்சி உண்டாகும் போது அதனை அடக்கி ஆண்டு தன் அன்பைச் சிதறவிடாது:- இறைவன் தனக்கு கணவனாக அனுப்பும் ஆணுக்கு மட்டுமே உரியது; மனைவியாக அனுப்பும் பெண்ணுக்கு மட்டுமே உரியது என்பதை உணர்ந்து அதனைத் தூய்மையாக காத்து வரவேண்டும். திருமண வாழ்வு எத்தனை சிறப்பான வாழ்வு. அதற்கு இளம் யுவதிகளும், இளைஞர்களும் ஆயத்தம் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல உடல் வலிமையுடன் இருக்க முயலவேண்டும். இறையன்பு, பிறரன்பு, தியாக மனப்பான்மையுடன் வளரவேண்டும்.

## கலைச் சொற்கள் 10

| | |
|---|---|
| Primary Sex Charicteristic | முதலாம்நிலை பால்இன அறிகுறி |
| Secondary Sex Charicteristic | இரண்டாம்நிலை பால்இன அறிகுறி |
| Peer | ஒரே வயதொத்தவர் |
| Adolescence | இளமைப்பருவம் |
| Personality | மனித ஆளுமை |
| Perspective | உளக்காட்சி |
| Unconscious Mind | நனவிலி உள்ளம் |
| Conscious Mind | நனவு உள்ளம் |
| Preconscious Mind | நனவு அடி உள்ளம் |
| Id | அது |
| Ego | அகம் |
| Super Ego | மீயகம் |
| Sexual Behaviour | பால் வேறுபாடு சார்ந்த நடத்தை |
| Hormone | உட்சுரப்பு நீர்வகை |
| Genetic | பிறப்பு மூலம் |
| Excitement | உணர்ச்சியூக்கம் |
| Plateau | ஒப்பனைச் சின்னம் |
| Orgasm | புணர்ச்சிப் பரவசநிலை |
| Resolution | உறுப்புக் கூறுபாடு |
| Instenct | இயல்புணர்ச்சி, இயல்பூக்கம் |
| Drive | உந்து |
| Incentive | செயல் நோக்கம் |
| Positive Thinking | நேர்க்கருத்து |

# துணை நூல்கள் 11

1. "The new Encyclopedia Britanrica" U. S. A, Macroredia Volume *8*, *15* edition, *1980* P, *1144*.

2. APril o, connell/ Vineen o' connell, choice charge, *1980*, P.*85*.

3. John R. Cavanagh, "Fundamental Marriage" counselling,, ,Cork, *1966* P. *127*.

4. Dr. Girija Khanna, "Women Sixteen to Sixty" ,Delhi, *21*, Daryaganj, *1974*, P. *7*.

5. Claire Rayner, "Atlas of the Body" (London, Rand Mc Nally and ComPany, *1976)* P. *111*.

6. MCrest R. Hilgard, "Indroduction to Psychology", *8* th Edition, New York, Harcourt Brace Jovanovich, Inc. P. *56*-

7. *அ.ெருபேட் "மனித நடத்தைக் கோலங்கள்" மணி ஓசை அச்சகம், யாழ்ப்பாணம், 1987. ப. 51.*

Association for Health and Counselling
JAFFNA

| 158.3 | 244 |
|---|---|
| CLASS NUMBER | ACCESSION NUMBER |

**Association for Health and Counselling, Shanthiham**

This book must be returned on or before the last date recorded above or a fine of Rs.5/- for each working day overdue will be levied.

